இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 136 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – மார்கழி 10 – செவ்வாய்க்கிழமை 26 டிசம்பர் 2023 – வெளியீடு 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 136 : Thiruvalluvar Year - 2054 - Margazhi 10 - Tuesday 26 December 2023 - Dak 8 Pages ₹ 5.00

## மழை வெள்ளம் : நெல்லை மாவட்டத்தில் உயிரிழந்த

# 16 பேரின் குடும்பத்தினருக்கு தலா ரூ.5 லட்சம் நிதி!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

**நெல்லை, டிச. 26-**

**திருநெல்வேலி மாவட்டத்தில் பெய்த கனமழை வெள்ளத்தினால் இறந்தவர்களின் குடும்பத்தினருக்கும் மற்றும் கால்நடைகளை இழந்தவர்களுக்கும் நிவாரண உதவிகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**



திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், மாவட்டத்தில் பெய்த கனமழை வெள்ளத்தினால் பல்வேறு பாதிப்புகள் ஏற்பட்டது. வெள்ளத்தினால் இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு மற்றும் கால்நடைகள் இழந்தவர்களுக்கு நிவாரணத் தொகையினையும், நிவாரணப் பொருட்களையும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சட்டமன்றப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன், ஆகியோர் முன்னிலையில் நேற்று (25.12.2023) வழங்கினார்.

### அதி கனமழையால் அதிகளவு பாதிப்புகள்!

திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த 17.12.2023 மற்றும் 18.12.2023 ஆகிய நாட்களில் பெய்த கனமழை காரணமாக மாவட்டம் முழுவதும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. தாமிரபரணி ஆற்றில் அதிக அளவுகளுக்கு மேல் தண்ணீர் வந்ததால் பல்வேறு இடங்களில் தண்ணீர் தேங்கி பாதிப்பு ஏற்பட்டது. இந்த மழையானது திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் அதிகளவு பாதிப்புகள் ஏற்படுத்தியது.

### போர்க்கால அடிப்படையில் சீரமைப்பு பணிகள்!

முதலமைச்சர் அவர்கள் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு பொறுப்பு அமைச்சர்களையும், உயர் அதிகாரிகளையும் அனுப்பி வைத்து மீட்புப் பணிகள் மற்றும் நிவாரண உதவிகளை வழங்க உத்தரவிட்டதன் அடிப்படையில், மீட்புப்பணிகள் துரிதபடுத்தப்பட்டு,போர்க்கால அடிப்படையில் சீரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகிறது.

### பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம்!

பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு நிவாரண உதவிகளும் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், கனமழை வெள்ளத்தால் திருநெல்வேலி மாவட்டத்தில் 16 நபர்கள் இறந்துள்ளார்கள். அவர்களுக்கு தலா ரூ.5 இலட்சம் வீதமும், 67 மாடுகள் இழந்தவர்களுக்கு தலா ரூ.37,500/– வீதமும், 1064 வீடுகள் இழந்தவர்களுக்கு தலா ரூ.10,000/– வீதமும், 504 ஆடுகள் இழந்தவர்களுக்கு தலா ரூ.4000/– வீதமும், 135 கன்றுகள் இழந்தவர்களுக்கு தலா ரூ.20,000/– வீதமும், 28,392 கோழிகள் இழந்தவர்களுக்கு தலா ரூ.100/– வீதம் 2 கோடியே 87 இலட்சத்து 7 ஆயிரத்து 700 ரூபாய் வழங்கப்படவுள்ளது.

### வீடு – கால்நடைகள் இழந்தோருக்கு நிவாரணத் தொகை!

இன்றைய தினம், முதல் கட்டமாக நீரில் மூழ்கி மற்றும் மின்சாரம் தாக்கி இறந்த 11 நபர்களின் குடும்பத்தினர்களுக்கு தலா ரூ.5 இலட்சம் வீதமும், வீடு இழந்த 5 நபர்களுக்கு தலா ரூ.10,000/– வீதமும், மாடு, ஆடு, கோழி இழந்த 5 உரிமையாளர்கள் என மொத்தம் 21 நபர்களுக்கு ரூ.58 இலட்சத்து 14 ஆயிரம் நிவாரணத் தொகையினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

தமிழ்நாட்டு பொதுமக்களை பாதுகாக்கும் அரசாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. நிவாரணப் பணிகளை அமைச்சர் பெருமக்கள், உயர் அதிகாரிகள் முனைப்புடன் செயலாற்றி வருகிறார்கள்.

இந்நிகழ்வில், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.சுகன்யா, திருநெல்வேலி மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன், திருநெல்வேலி மாநகராட்சி ஆணையர் தாக்கரேசுபம் ஞானதேவ்ராவ், முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் இரா. ஆவுடையப்பன்,முன்னாள் அமைச்சர் டி.பி.எம்.மைதீன்கான், துணைமேயர் கே.ஆர்.ராஜ்6, மாவட்ட ஊராட்சித் தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ், பேரிடர் வட்டாட்சியர் செல்வம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மாலைராஜா உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (25.12.2023) முகாம் அலுவலகத்தில், தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் அறக்கட்டளை சார்பில் 5 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு உள்ளார்.

## இயற்கை பேரிடர்: இமைப்பொழுதும்

# துஞ்சாது, ஓய்வின்றி பணியாற்றும் முதல்வர்!

### குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் பாராட்டு!

சென்னை, டிச. 26–

தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள், முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு ரூ.5 இலட்சத்திற்கான காசோலையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் வழங்கி, இயற்கை பேரிடரின் போது, அச்சவால்களை எதிர்கெண்டு போர்க்கால அடிப்படையில் மக்களை காக்கும் பணியினை சிறப்புடன் ஆற்றியதற்காக பாராட்டினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று (25.12.2023) முகாம் அலுவலகத்தில், தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் அறக்கட்டளை சார்பில் 5 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்.

இச்சந்திப்பின்போது, தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள், மழை வெள்ளம் போன்ற இயற்கை பேரிடர் எதிர்பாராத பெரும் தாக்குதலை நிகழ்த்தியபோது, அந்த சவால்களை எதிர்கொண்டு போர்க்கால அடிப்படையில் மக்களை காக்கும் பணியில் இமைப்பொழுதும் துஞ்சாது ஓய்வின்றி சுற்றிச்சுழன்று பணியாற்றும் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, பாராட்டினார்.

இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு இச்சந்திப்பின்போது உடனிருந்தார்.

## பேரிடர் காலத்திலும் அரசியல் செய்கிறார் ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் !

# நிர்மலா சீதாராமன் தகுந்த நிதியை வழங்குவார் என்று நம்புகிறேன்!

## நெல்லையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி!

**நெல்லை.டிச.26-**

**நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள கட்டுப்பாட்டு அறையில் வைத்து நெல்லை மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த 16 பேரில் முதல் கட்டமாக 11 நபர்கள் குடும்பத்திற்கு தலா ரூபாய் 5 லட்சம் வீதம் நிவாரணத் தொகை மற்றும் நிவாரண உதவிகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

இந்நிகழ்வில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு, பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, வணிகவரித் துறை அமைச்சர் பி.மூர்த்தி,மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், பாளை சட்டமன்ற உறுப்பினர் அப்துல்வகாப், மேயர் சரவணன், மாநகராட்சி ஆணையாளர் தாக்கரே சுபம் ஞானதேவ்ராவ், ஆகியோர் கலந்து கொண்டனர்.

பின்னர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:–

நெல்லை மாவட்டத்தில் முதற்கட்டமாக 11 உயிரிழந்த நபர்களின் குடும்பத்திற்கு நிதி உதவி வழங்கியுள்ளோம். கால்நடைகள், விளை நிலங்கள் பாதிக்கப்படுபவர்களுக்கும் முதற்கட்ட நிதி வழங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து அனைத்து பாதிக்கப்பட்ட நபர்களுக்கும் நிவாரண உதவிகள் வழங்கப்படும். 10 நாட்களாக அமைச்சர்கள், அரசு அலுவலர்கள் களத்தில் பணி செய்கிறார்கள். தற்போது அரசியல் வேண்டாம் குளம் தூர்வாரும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

### தமிழிசை அரசியல் பேசுகிறார்!

ஆளுநர் தமிழிசை சௌந்தர்ராஜன் அரசியல் பேசுகிறார். வரலாறு காணாத 100 ஆண்டுகளில் இல்லாத அளவு கனமழை பெய்ததால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பணிகள் நடப்பது பற்றி மக்களுக்குத் தெரியும். மக்கள் இந்த பிரச்சினையை புரிந்து கொள்வார்கள்.

மலை கிராமமான மாஞ்சோலைக்கு பேருந்து போக்குவரத்து துவங்காத நிலையில் மக்கள் இலவசமாக வேன் உள்ளிட்ட வாகனங்களில் அழைத்துச் செல்லப்படுகிறார்கள். பேரிடர் இல்லை என்று கூறிய ஒன்றிய நிதி அமைச்சர் பேரிடர் பாதிப்புகளை பார்வையிட நாளை (இன்று) தூத்துக்குடி வருகிறார். முறையாக பார்வையிட்டு தகுந்த ஆய்வு செய்து நிதி வழங்குவார் என்று நம்புகிறோம்.

பிரதமர் மோடி அவர்கள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு தற்போதைய நிலைமை குறித்து பேசி உள்ளார். முதலமைச்சர் அவர்களும் நிலைமையை எடுத்து கூறி, கூடுதல் நிதி கோரி உள்ளார்கள். பிரதமர் அவர்களிடம் வைக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து நாளை (இன்று) தூத்துக்குடி வரக்கூடிய ஒன்றிய நிதிஅமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து தகுந்த நிதி தருவார் என நினைக்கிறேன்.

இவ்வாறு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம.மைதீன்கான், மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் துணை மேயர் ராஜ் உள்பட கழகத்தினர் கலந்து கொண்டனர்.

## டெல்லியில் கடும் பனிமூட்டம்:

# விமான சேவை பாதிப்பு...!

டெல்லி, டிச.26-

நாட்டின் வடமாநிலங்களில் கடந்த சில நாட்களாக கடும் பனிமூட்டம் நிலவி வருகிறது. இதனால், வாகன ஓட்டிகள் மிகுந்த அவதிக்குள்ளாகியுள்ளனர். சாலையில் முன்னே செல்லும் வாகனங்கள் தெரியாததால் முகப்பு விளக்குகளை போட்டபடியே வாகன ஓட்டிகள் பயணிக்கின்றனர்.

இந்நிலையில், கடும் பனிமூட்டம் காரணமாக டெல்லியில் விமான போக்குவரத்து சேவை பாதிக்கப்பட்டுள்ளது. ஓடுதளம் தெரியாதவகையில் பனிமூட்டம் இருப்பதால் விமான சேவை பாதிக்கப்பட்டுள்ளது.

## டி.என்.பி.எஸ்.சி. குரூப் 2

# காலிப்பணியிடங்கள் எண்ணிக்கை அதிகரிப்பு!

சென்னை, டிச.26-

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் (டி.என்.பி.எஸ்.சி.) குரூப் 2 மற்றும் குரூப் 2ஏ பதவிகளில், 5 ஆயிரத்து 413 பணியிடங்கள் இருந்தன. இதற்கான, முதல்நிலை எழுத்துத் தேர்வு கடந்த 2022ம் ஆண்டு மே மாதம் நடைபெற்றது. இதில் தேர்ச்சி பெற்றவர்களுக்கான முதன்மை எழுத்து தேர்வு கடந்த பிப்ரவரி மாதம் நடைபெற்றது. குரூப் 2 மற்றும் 2ஏ தேர்வுகளுக்கான முடிவுகள் விரைவில் வெளியாக உள்ளன.

இந்நிலையில், குரூப் 2 மற்றும் குரூப் 2ஏ காலிப் பணியிடங்கள் எண்ணிக்கை 5 ஆயிரத்து 860 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அதிகரிக்கப்பட்டுள்ள காலிப்பணியிடங்களுக்கான விவரங்களை www.tnpsc.gov.inஎன்ற இணைய தளத்தில் தெரிந்து கொள்ளலாம்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 26-12-2023

# பெண்ணினத் துரோகமும் பாலியல் நட்பும்

மல்யுத்தத்தில் இருந்து விடை பெற்று விட்டார் சாக்சி மாலிக்!

பத்மஸ்ரீ விருதை திரும்ப ஒப்படைப்பதாக அறிவித்து விட்டார் பஜ்ரங் புனியா!

பாலியல் குற்றச்சாட்டுக்கு ஆளான பிரிஜ் பூஷன் சரண்சிங் மீது இது வரை நடவடிக்கை இல்லை!

பிரிஜ் பூஷன் சரண் சிங்கின் உதவியாளர் சஞ்சய் சிங் – இந்திய மல்யுத்தக் கூட்டமைப்பின் புதிய தலைவர் ஆகிவிட்டார்!

பாலியல் புகாருக்கு உள்ளான கூட்டத்தைக் காப்பாற்றி விட்டது பா.ஜ.க.!

இதன் மூலமாக பெண்ணினத்துக்குச் செய்த துரோகம் அம்பலமாகி விட்டது!

**பெண் ஷக்தி என்று பேசும் தகுதியை பா.ஜ.க. இழந்துவிட்டது!**

**இதைவிடக் கேவலம், மகாக்கேவலம், மகாமகா கேவலம் இருக்க முடியுமா?**

**ஒரே ஒரு தனிமனிதன்தான் பிரிஜ் பூஷன் சரண் சிங். அவரைக் காப்பாற்ற எவ்வளவு கேவலமான முடிவையும் எடுப்போம் என்றால் பா.ஜ.க. தலைமையின் மனதுக்குள் எந்தளவுக்கு அறமற்ற சிந்தனை அரங்கேறி இருக்கிறது என்பதற்கு உதாரணம்தான் மல்யுத்த வீராங்கனைகள் விவகாரத்தில் நடந்தது.**

2023 ஆம் ஆண்டு முடியப் போகிறது. 2023 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இந்த பிரச்சினை வெளிச்சத்துக்கு வந்தது. கடந்த ஜனவரி 18 ஆம் தேதி மல்யுத்த வீராங்கனைகள் வினேஷ் போகட், சாக்சி மாலிக், பஜ்ரங் புனியா ஆகியோர் பா.ஜ.க. எம்.பி.யும், இந்திய மல்யுத்தக் கூட்டமைப்பின் தலைவருமான பிரிஜ் பூஷண் ஷரண் சிங் மீது பல கடுமையான குற்றச்சாட்டுகளை சுமத்தினர். பிரிஜ் பூஷண் சிங்கும், பயிற்சியாளரும், தேசிய முகாமில் பெண் மல்யுத்த வீரர்களை பாலியல் ரீதியாக துன்புறுத்துவதாக வினேஷ் போகட் அழுதுகொண்டே கூறினார். மல்யுத்த வீராங்கனைகள் போராட்டம் நடத்தினார்கள்.

ஊடகங்களில் இது பெரிதாக ஆனதும், வேறு வழியில்லாமல் ஐந்து பேர் கொண்ட விசாரணைக் குழுவை அமைத்தார்கள். இந்தக் குழுவை அமைப்பதற்கே ஒருவார காலம் ஆனது. இந்த குழுவின் தலைவராக மூத்த குத்துச்சண்டை வீராங்கனை எம்.சி.மேரி கோம் தேர்வு செய்யப்பட்டார். விசாரணையை நான்கு வாரங்களுக்குள் முடிக்குமாறு குழுவுக்கு உத்தரவிடப்பட்டது. குழு அமைக்கப்பட்டது ஜனவரி 23 ஆம் தேதி. அப்படியானால் பிப்ரவரி 23 ஆம் தேதிக்குள் குழுவின் அறிக்கை கொடுக்கப்பட்டு நடவடிக்கை பாய்ந்திருக்க வேண்டும். குழு தனது அறிக்கையைக் கொடுத்ததே தவிர, அதில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்பதை பொதுவெளியில் சொல்லவில்லை. மல்யுத்த வீராங்கனைகள் மீண்டும் போராட்டம் நடத்தினார்கள்.

நேரடியாகவே, ஏப்ரல் 21 ஆம் தேதி, பிரிஜ்பூஷண் சிங்குக்கு எதிராக கனாட் பிளேஸ் காவல் நிலையத்திற்கு புகார் செய்ய மல்யுத்த வீராங்கனைகள் சென்றார்கள். ஆனால் போலீஸார் எஃப்.ஐ.ஆர். பதிவு செய்யவில்லை. ஏப்ரல் 23 ஆம் தேதி ஒலிம்பிக் பதக்கம் வென்ற மல்யுத்த வீரர்களான பஜ்ரங் புனியா, சாக்சி மாலிக், வினேஷ் போகட் தலைமையில் மல்யுத்த வீரர்கள் இரண்டாவது முறையாக பிரிஜ்பூஷண் ஷரண்சிங்குக்கு எதிராக களமிறங்கினார்கள். அந்தப் போராட்டம் பல மாதங்கள் தொடர்ந்தது. பிரியங்கா காந்தி, போராட்டக் களத்துக்கு நேரில் சென்று ஆதரவு தெரிவித்தார். ஏன் வழக்கு பதியவில்லை என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் கேள்வி எழுப்பினார்கள். உடனே, ஏப்ரல் 29 ஆம் தேதி பா.ஜ.க. எம்.பி. மீது டெல்லி கனோட் ப்ளேஸ் காவல் நிலையத்தில் இரண்டு எஃப்.ஐ.ஆர்.கள் பதிவு செய்யப்பட்டது. ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் வென்ற ஈட்டி எறிதல் வீரர் நீரஜ் சோப்ரா, மூத்த கிரிக்கெட் வீரர் கபில் தேவ், ஒலிம்பியன் அபினவ் பிந்த்ரா ஆகியோர் இந்த வீராங்கனைகளுக்கு ஆதரவு அளித்தார்கள்.

அதன்பிறகாவது விசாரணை முறையாக நடந்ததா என்றால் இல்லை. போக்சோ சட்டத்தில் பதியப்பட்ட வழக்கை வாபஸ் வாங்க வைத்துவிட்டார்கள். பா.ஜ.க. எம்.பி.யை கைது செய்யாமலேயே வழக்கு விசாரணை நடத்தி வருவதாக நாடகம் ஆடிக் கொண்டு இருக்கிறார்கள்.

இந்திய மல்யுத்த கூட்டமைப்பில் பிரிஜ் பூஷன் சரண் சிங் ஆதிக்கம் தொடரவே செய்தது. இந்திய மல்யுத்த கூட்டமைப்பின் புதிய தலைவருக்கான தேர்தலில் பிரிஜ் பூஷன் சரண்சிங்கின் உதவியாளர் சஞ்சய் சிங் தேர்வாகி இருக்கிறார். இதை விட அசிங்கம் இருக்க முடியாது.

**“நாங்கள் எங்கள் இதயத்தில் இருந்து போராடினோம். ஆனால் பிரிஜ் பூஷனின் நெருங்கிய உதவியாளர் சஞ்சய் சிங்கே இப்போது தலைவராக தேர்வாகி இருக்கிறார். இதனால் நான் மல்யுத்தத்தை விட்டு விலகுகிறேன். நாங்கள் ஒரு பெண் தலைவராக வர வேண்டும் என்று விரும்பினோம். ஆனால் அது நடக்கவில்லை”** என்று கண்ணீர் மல்கச் சொல்லி விட்டு தனது ஷூவை செய்தியாளர்கள் முன்னால் வைத்து விட்டு மல்யுத்த வீராங்கனை சாக்சி மாலிக் வெளியேறி இருக்கிறார். ஒலிம்பிக்கில் இந்தியாவுக்கான பதக்கம் வென்று தந்தவர் இவர். 2009 முதல் பல்வேறு பதக்கங்களைப் பெற்றவர் இவர்.

ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற வீரர் பஜ்ரங் புனியா. அவரும் மல்யுத்தத்தில் இருந்து விலகுவதாக அறிவித்து இருக்கிறார். பிரதமர் மோடிக்கு அவர் கடிதம் எழுதி உள்ளார். **“அன்புள்ள பிரதமரே! ஜனவரி மாதம் பிரிஜ் பூஷனுக்கு எதிராக 19 பேர் புகார் சொன்னார்கள். அந்த எண்ணிக்கை ஏப்ரல் மாதத்தில் 7 ஆக குறைந்தது. 12 பேரை மிரட்டி விட்டார் பிரஜ் பூஷன். நாங்கள் போராட்டம் நடத்திய தளம் இடிக்கப்பட்டது. போராட்டம் நடத்த தடை விதிக்கப்பட்டது. நாங்கள் வென்ற பதக்கங்களை கங்கையில் வீச முடிவெடுத்தோம். இப்போது பிரஜ் பூஷனின் கூட்டாளியே தலைவராக வந்துவிட்டார். இந்த தேர்வால் நான் மல்யுத்தத்தை கைவிடுகிறேன். எனது பத்மஸ்ரீ விருதையும் திருப்பி ஒப்படைக்கிறேன்”** என்று அதில் குறிப்பிட்டுள்ளார்.

**பெண் ஷக்தி என்று பேசும் தகுதியை பா.ஜ.க. இழந்துவிட்டது!**

**இதைவிடக் கேவலம், மகா கேவலம், மகா மகா கேவலம் இருக்க முடியுமா?**

●●

## தமிழ்நாட்டில் 29 பேருக்கு கொரோனா!

சென்னை, டிச. 26 –

தமிழ்நாட்டில் நேற்று முன்தினம் 357 பேருக்கு கொரோனா பரிசோதனை செய்யப்பட்டது. அந்தவகையில், சென்னை மாவட்டத்தில் 14 பேருக்கும், செங்கல்பட்டு மாவட்டத்தில் 4 திருவாரூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் தலா 2 பேருக்கும், திருவள்ளூர், திருவண்ணாமலை, கடலூர், கிருஷ்ணகிரி, நாமக்கல், தஞ்சாவூர் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் தலா ஒருவருக்கும் என 29 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டது. மேலும், சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை 132 ஆக அதிகரித்துள்ளது. இதேபோல, நேற்று முன்தினம் தமிழ்நாட்டில் உயிரிழப்பு ஏதும் ஏற்படவில்லை.

மேற்கண்ட தகவல் மக்கள் நல்வாழ்வுத்துறை வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (25.12.2023) முகாம் அலுவலகத்தில், வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் தனது பிறந்தநாளையொட்டி குடும்பத்தினருடன் சந்தித்து, வாழ்த்துப் பெற்றார்.

# தமிழ்நாட்டில் ஏற்பட்ட இரட்டைப் பேரிடரிலிருந்து மீண்டெழ ஒன்றிய அரசு உதவும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலினை – தொலைபேசி வாயிலாகத் தொடர்புகொண்டு பிரதமர் நரேந்திர மோடி உறுதி!

புதுடெல்லி, டிச.26-

“தமிழ்நாட்டில் ஏற்பட்ட இரட்டைப் பேரிடரிலிருந்து மீண்டெழ ஒன்றிய அரசு உதவும்!” என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் உறுதி அளித்தார்.

இவ்வுரையாடல் தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளதாவது:-





**மிக்ஜாம் புயல் பாதிப்பு ஏற்பட்ட உடனே, தென் தமிழ்நாட்டில் ஏற்பட்ட வரலாறு காணாத பெருவெள்ளம் குறித்துக் கேட்டறிய பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் என்னை அழைத்திருந்தார்.**

**கடும் நிதி நெருக்கடிக் கிடையே மாநில அரசு மேற்கொண்டு வரும் பெரும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து அவரிடம் விளக்கிக் கூறி, ஒன்றிய அரசிடம் இருந்து உடனடி நிதி உதவியைக் கோரினேன்.**

**இந்த இரட்டைப் பேரிடரில் இருந்து தமிழ்நாடு மீண்டெழ ஒன்றிய அரசு உதவும் என உறுதியளித்த பிரதமர் அவர்கள், வெள்ளப் பாதிப்பை மதிப்பிட ஒன்றிய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் அவர்களை நியமித்திருப்பதாகவும் தெரிவித்தார்.**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### திருநெல்வேலி மாவட்டத்தில் பெய்துள்ள கனமழை காரணமாக பாதிக்கப்பட்ட

# பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் சீரமைப்புப் பணிகள்!

## தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்!

நெல்லை, டிச. 26-

திருநெல்வேலி மாவட்டத்தில் 17.12.2023 மற்றும் 18.12.2023 அன்று பெய்த கனமழை காரணமாக தாமிரபரணி ஆற்றில் வெள்ள பெருக்கு ஏற்பட்டு பல்வேறு பகுதிகளில் வெள்ளநீர் சூழ்ந்து பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட இடங்களில் சீரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

திருநெல்வேலி மாவட்டம், சீவலப்பேரி பகுதியில் தாமிரபரணி ஆற்றிலிருந்து பர்கிட் மாநகர் கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு தண்ணீர் கொண்டு செல்வதற்காக அமைக்கப்பட்டுள்ள உறை கிணறு மற்றும் குடிநீர் குழாய்கள் முழுவதுமாக சேதமடைந்தள்ளதையும் மற்றும் கங்கைகொண்டான் சிப்காட்டிற்கு தண்ணீர் செல்லும் குடிநீர் குழாய் முழுமையாக சேதமடைந்துள்ளதையும் மேற்கொண்டு சீரமைப்பு பணிகள் நடைபெற்று வருவதையும் தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா பார்வையிட்டார்.

மேலும், திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி, மருத்துவமனைக்கு குடிநீர் எடுத்தும் எடுக்கும் உறைகிணறுகள் இரண்டும் சேதமடைந்துள்ளதையும், மானூர் கூட்டுக்குடிநீர் திட்டத்திற்கு தண்ணீர் எடுத்தும் செல்லும் இரண்டு உறைகிணறுகள் சேதமடைந்துள்ளன. அதில் ஒரு உறைகிணறு சரி செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள உறைகிணறுகள் சரி செய்யும் பணிகள் நடைபெற்று வருவதையும் தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, பார்வையிட்டார்.

தொடர்ந்து, சிவந்திப்பட்டி ஊராட்சி நெஞ்சான் குளம் கரை மழை வெள்ளத்தின் காரணமாக உடைப்பு ஏற்பட்டுள்ளதையும், மேற்கொண்டு சீரமைப்பு பணிகள் நடைபெற்று வருவதையும் பார்வையிட்டார்.

பின்னர், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது: -

திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் பெய்துள்ள கனமழை காரணமாக பல்வேறு இடங்களில் வெள்ளம் ஏற்பட்டு பாதிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டுள்ள இடங்களில் போர்க்கால அடிப்படையில் பணிகள் நடைபெற்று வருகிறது. நேற்று தூத்துக்குடி மாவட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ள இடங்களிலும் இன்று திருநெல்வேலி மாவட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ள இடங்களில் நேரடியாக ஆய்வு மேற்கொண்டு சீரமைப்பு பணிகளை விரைந்து மேற்கொள்ளுமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. வருவாய்த்துறை, நீர் வளத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, சுகாதாரத் துறை, மின்சாரத்துறை ஆகிய துறைகள் இணைந்து வெள்ள சேதப்பணிகளை போர்க்கால அடிப்படையில் பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். சிவந்திப்பட்டி நெடுஞ்சான் குளம் மழை வெள்ளத்தின் காரணமாக உடைப்பு ஏற்பட்டுள்ளதை இன்று ஆய்வு செய்யப்பட்டது. மழை வெள்ளத்தின் காரணமாக மாவட்டத்தில் பல குளங்கள் உடைப்புகள் ஏற்பட்டுள்ளது. இந்த சீரமைப்பு பணிகளை மேற்கொண்டு விரைவாக சரி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குளங்கள் உடைப்புகளை நீர்வளத்துறையின் மூலம் சரிசெய்யப்பட்டு வருகிறது.

மழை வெள்ளத்தின் காரணமாக மாவட்டத்தில் 175 இடங்களில் சாலை சேதமடைந்துள்ளது. நெடுஞ்சாலைத்துறை மூலம் இது வரை 150 சாலைகள் சரி செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள இடங்களில் சாலை சரிசெய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது. முக்கியமாக போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் இருப்பதற்கு சாலை பணிகள் சரி செய்யப்பட்டுள்ளது. மாவட்டத்தில் அனைத்து இடங்களிலும் மின்சாரம் தடையின்றி கிடைத்து வருகிறது. ஒரு சில இடங்களில் மட்டும் ட்ரான்ஸ்பார்மர் மழை வெள்ளம் காரணமாக பழுதடைந்துள்ளது. அப்பணிகளையும் துறை சார்ந்த ஊழியர்கள் மூலம் சரி செய்யப்பட்டு வருகிறது. சீவலப்பேரி தாமிரபரணி ஆற்றிலிருந்து பர்கிட் மாநகர் கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு தண்ணீர் செல்வதற்கான அமைக்கப்பட்டுள்ள உறைகிணறுகள் மற்றும் குடிநீர் குழாய்கள் சேதமடைந்துள்ளதை ஆய்வு செய்யப்பட்டது. திருநெல்வேலி மாவட்டத்தில் 101 கூட்டுக் குடிநீர் திட்டம் உள்ளது மழை வெள்ளத்தின் காரணமாக 70 கூட்டுக் குடிநீர் திட்டம் பாதிக்கப்பட்டுள்ளது. 34 கூட்டுக் குடிநீர் திட்டம் சரி செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 36 கூட்டுக் குடிநீர் திட்டம் சரி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமிழ்சாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள மழை வெள்ளத்தின் காரணமாக வீடுகள் மற்றும் கால்நடைகள் பாதிப்பு கணக்கெடுக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. பாதிக்கப்பட்ட இடங்களில் சரி செய்வதற்கு அனைத்துத் துறை சார்ந்த அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகிறார்கள். விரைவாக அனைத்து பணிகளையும் சரிசெய்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

தொடர்ந்து, திருநெல்வேலியிலிருந்து மதுரை செல்லும் வண்ணார்பேட்டை புறவழிச் சாலை தாமிரபரணி ஆற்று பாலம் மழை வெள்ளத்தின் காரணமாக பாலத்தில் கைப்பிடி சுவரும் மற்றும் ஒரு சில பகுதிகள் சேதமடைந்துள்ளதை தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, பார்வையிட்டு விரைவாக சீர்மைக்கும் பணிகளை மேற்கொள்ள சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்த ஆய்வில், கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிர்வாக ஆணையர் எஸ்.கே.பிரபாகர், மாவட்ட கண்காணிப்பு அலுவலர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச்செயலாளர் மரு.இரா. செல்வராஜ், குடிநீர் வழங்கல் வாரிய மேலாண்மை இணை இயக்குநர் வே.சரவணன், மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன் உட்பட அரசு உயர் அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.





தூத்துக்குடி மாவட்டத்தில் பெய்த அதிகனமழையின் காரணமாகவும், தாமிரபரணி ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாகவும் திருவைகுண்டம் வட்டம் முறப்பநாடு பகுதியில் மருதூர் மேல்கால்வாயில் இருந்து பக்கப்பட்டி வழியாகச் செல்லும் பாசனக் கால்வாயில் அதிக நீர்வரத்து காரணமாகப் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.12.2023) நேரில் பார்வையிட்டு, விவசாயிகளிடம் பயிர் சேதங்கள் குறித்து கேட்டறிந்தார். அமைச்சர்கள் எ.வ.வேலு, அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், பி.மூர்த்தி, மாவட்ட ஆட்சித்தலைவர் கோ.லட்சுமிபதி, எம்.சி.சண்முகையா எம்.எல்.ஏ. மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர். அப்போது அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் பாதிக்கப்பட்ட மக்கள் தங்களின் வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டதாகத் தெரிவித்தனர். இதனை, முதல்வரின் கவனத்திற்கு கொண்டு செல்வதாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.




திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று (25.12.2023) நெல்லை மாவட்டத்தில் பெய்த கனமழை வெள்ளத்தினால் இறந்தவர்களின் குடும்பத்தினருக்கும், கால்நடைகளை இழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் ரூ.58.14 இலட்சம் மதிப்பிலான நிவாரணத் தொகையினை 21 நபர்களுக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். உடன் சட்டமன்றப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு, அமைச்சர்கள் எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, பி.மூர்த்தி, மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன், மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ., திருநெல்வேலி மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன், மாநகராட்சி ஆணையர் தாக்கரே சுபம் ஞானதேவ்ராவ், துணை மேயர் கே.ஆர்.ராஜு உட்பட பலர் உள்ளனர்.

### வெள்ளம்: நள்ளிரவில் வீடு வீடாகச் சென்று அதிகாரிகள் எச்சரித்ததால்

# திருவைகுண்டத்தில் 2400 பேர் மீட்பு!

## ‘தி இந்து’ ஆங்கில நாளேட்டில் செய்தி!

சென்னை, டிச. 26-

நள்ளிரவில் அரசு அதிகாரிகளும் காவல் துறையினரும் வீடு வீடாகச் சென்று எச்சரித்ததால் 2400க்கும் மேற்பட்டோர் கடும் வெள்ள பாதிப்பிலிருந்து காப்பாற்றப் பட்டுள்ளனர்.

இதுகுறித்து ‘தி இந்து’ நாளேட்டில் வெளியான செய்தி வருமாறு:-

கடந்த (சனிக்கிழமை) 17-ஆம் தேதி இரவு தாமிர பரணி ஆற்றில் வெள்ளம் வரப்போகிறது; கரையோர மக்களை உடனே வெளியேற்றுங்கள் என்ற அபாய எச்சரிக்கையை திருவைகுண்டம் தாலுக்கா அதிகாரிகள் உடனடியாக கவனத்தில் கொண்டு செயல்படத் தொடங்கினர்.

தூத்துக்குடி மாவட்டத்தில் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் திருவைகுண்டமும் ஒன்றாகும். கடுமையான மழை பெய்த நிலையிலும் நள்ளிரவு என்றும் பாராது வருவாய்த்துறை அதிகாரிகளும் காவல்துறை அதிகாரிகளும் விரைந்து செயல்பட்டதன் காரணமாக உயிரிழப்பு என்பது மிகவும் குறைவாகவே இருந்தது.

மழை தொடர்பான இந்தச் சம்பவத்தில் 2400 பேர் காப்பாற்றப்பட்டு 2 பேர் மட்டுமே இறந்துள்ளனர். ‘தாமிரபரணி ஆற்றில் வெள்ளம் ஏற்படப் போகிறது’ என்று மாவட்ட ஆட்சித் தலைவர் ஜி.லட்சுமிபதியிடமிருந்து எங்களுக்கு எச்சரிக்கை வந்தவுடன், எங்கள் அதிகாரிகள் 22 கி.மீ. நீளமான கரையோரமுள்ள கிராமங்களுக்கு - அதிலும் குறிப்பாக 500 மீட்டருக்கும் குறைவான பகுதியிலுள்ள சிறு சிறு குக்கிராமங்களுக்கும் நள்ளிரவு என்றும் பாராமல் அங்குள்ள மக்களை வெளியேற்றியதாக திருவைகுண்டம் தாசில்தார் எஸ்.சிவகுமார் தெரிவித்துள்ளார்.

காவல்துறை அதிகாரிகளின் உதவியுடன், மண்டல போக்குவரத்துத்துறை அதிகாரிகளின் வாகனங்களில் வீடு வீடாகச் சென்று கதவை தட்டி அங்குள்ளவர்களுக்கு எச்சரிக்கை செய்தோம். சிறிதும் கால தாமதம் செய்யாமல், ஒரு லட்சம் கன அடி அளவிற்கு தாமிர பரணி ஆற்றில் தண்ணீர் வர உள்ளதால் பெரு வெள்ளத்திற்கு வாய்ப்புள்ளது; உடனே எழுந்து வந்து விடுங்கள் என்று எச்சரித்தோம். ஒரு சில இடங்களில் உள்ள மக்கள் எங்கள் பேச்சைக் கேட்டு உடனடியாக தங்களது வாகனங்கள் மூலம் வெளியேறிவிட்டனர். வேறு சில இடங்களில் வெளியேற மறுத்தனர். எங்களது அதிகாரிகள், ஒத்துழைப்பு நல்குமாறு அவர்களை கெஞ்சினர். இன்னும் ஓரிரு மணியில் தொலை தொடர்பும் துண்டிக்க வாய்ப்பு உள்ளது, என்று மன்றாடியதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தா.

ஏறத்தாழ 2400 பேரை அதிகாரிகள் மீட்டு, பாதுகாப்பான இடங்களில் தங்க வைத்தனர். தாழ்வான இடங்களில் இருந்து பாதுகாப்பான இடத்திற்கு அவர்கள் மீட்கப்பட அதிகாரிகள் கால தாமதம் செய்யாமல் உடனடியாக செயல்பட்டதை குறிப்பிட்டாக வேண்டும்.

அணைகளில் இருந்து விடுவிக்கப்பட்ட தண்ணீருடன் நெல்லை மாவட்டத்தில் பெய்த கனமழையும் சேர்ந்து தாமிரபரணி ஆற்றில் ஒரு லட்சம் கன அடி என்கிற அளவிற்கு வெள்ளம் கரை புரண்டு ஓடியது. திங்கள் காலை 6 மணி வரை 24 மணி நேரத்தில் திருவைகுண்டம் தாலுக்காவில் மட்டும் 618 மில்லி மீட்டர் மழை பெய்தது.

அது மட்டுமின்றி, சென்னை நோக்கிச் செல்லும் செந்தூர் எக்ஸ்பிரஸ் ரெயில், கடும் வெள்ளம் காரணமாக திருவைகுண்டம் ரெயில் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட நிலையில், அதில் பயணம் செய்த 250 ரெயில் பயணிகளை விரைந்து செயல்பட்டு மீட்டனர். தொலை தொடர்பு துண்டிக்கப்பட்ட காலை 2.30 மணி வரை செயல்பட்ட மீட்புப் பணி அதன் பிறகு தொடர முடியவில்லை.

மிகக் கடுமையான வெள்ளம் ஏற்பட்ட நிலையிலும் திருவைகுண்டம் தாலுக்காவில் 2 உயிர்கள் மட்டுமே பலியானதாக தாசில்தார் தெரிவித்தார்.

இவ்வாறு ‘தி இந்து’ ஆங்கில நாளேட்டில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

# கிள்ளியூர் தெற்கில் மதநல்லிணக்க கிறிஸ்துமஸ் விழா!

## ஒன்றியச் செயலாளர் கோபால் ஏற்பாட்டில் நடைபெற்றது!

கன்னியாகுமரி, டிச. 25 -

அமைச்சரும் கன்னியாகுமரி மேற்கு மாவட்ட செயலாளருமான மனோதங்கராஜ் வழிகாட்டுதலில், கிள்ளியூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் கோபால் ஏற்பாட்டில் கிள்ளியூர் தெற்கு ஒன்றியத்தின் மதநல்லிணக்க கிறிஸ்மஸ் விழா மாவட்ட கழக அலுவலகத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

ஒன்றிய மாவட்ட அயலக அணி அமைப்பாளர் பாலூர் தேவா தலைமையில், தலைமை செயற்குழு உறுப்பினர் ரெமோன் மனோதங்கராஜ், மாவட்ட அவைதலைவர் மரியசிசுகுமார், மாவட்ட விளையாட்டு அணி அமைப்பாளர் ஜஸ்டின் தேவ் முன்னிலையில் நடைபெற்றது. ஒன்றியச் செயலாளர் கோபால் சிறப்புரை ஆற்றி தீர்மானங்களை வாசித்தார்.

தமிழ்நாட்டின் தலைநகரத்தையும் தென்மாவட்டங்களையும் உலுக்கிய பெருமழை வெள்ளத்தின் கோரப்பிடியிலிருந்து மக்களைக் காத்த தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றிகளை கிள்ளியூர் தெற்கு ஒன்றியத்தின் சார்பில் கூறிக்கொள்கிறோம். வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணி வெற்றிபெற்று ஆட்சி அமைக்க கிள்ளியூர் தெற்கு ஒன்றியம் சார்பில் வாழ்த்துகிறோம்.

தமிழர் என்று கூறிக்கொண்டு தமிழ்நாடு முதல்வர் மீதும், கழக அரசின் மீதும் புதுடெல்லியிலிருந்து வெறுப்பை உமிழ்ந்த ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனை வன்மையாகக் கண்டிக்கிறோம் என்ற தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களுக்கு தலைமைசெயற்குழு உறுப்பினர் ரெமோன் மனோதங்கராஜ் கிறிஸ்மஸ் பரிசுகளை வழங்கினார்.

விழாவில் மாவட்ட துணை அமைப்பாளர் ராஜ், ஒன்றிய துணை அமைப்பாளர் துரைராஜ், பொருளாளர் தங்கதுரை, பேரூர் செயலாளர்கள் சத்தியராஜ், மனோஜ், கான், ஜெனோ, ததேயூஸ், விவேகானந்தன் மற்றும் பேரூர், கிளை கழக நிர்வாகிகள் மகளிர்கள் பொதுமக்கள் என திரளான மக்கள் கலந்து கொண்டனர்

### உலகம் பெரியார் மயமாகும்!

# வென்றோம் - நின்றோம் - புதுப்பிப்போம்!

## தந்தை பெரியார் நினைவுநாளையொட்டி விடுத்த அறிக்கையில் - திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி சூளுரை!

சென்னை, டிச. 26-

தந்தை பெரியார் அவர்களின் நினைவு நாளையொட்டி விடுத்த அறிக்கையில், ‘வென்றோம் நின்றோம் - புதுப்பிப்போம்’ என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் கூறியுள்ளார்.



அவரது அறிக்கை வருமாறு:-

“தந்தை பெரியார்” என்று வற்றாத பாசத்தோடும், வற்றாத உணர்வோடும் கோடானுகோடி மனிதர்கள் அழைத்து மகிழும் நமது அறிவாசான் தலைவர் உடலால் மறைந்தாலும், உணர்வால், லட்சியங்களால் உலகின் பற்பல பாகங்களிலும் பகுத்தறிவுக் கலங்கரை வெளிச்சமாய், சுயமரியாதை ஞானச் சூரியனாய் ஒளிபரப்பிடும் வரலாற்றுக் குறிப்புகளுடன் வாழ்ந்து கொண்டுள்ளார்!

ஓர் அரை நூற்றாண்டு அய்ம்பது ஆண்டுகள் உருண்டோடிய நிலையிலும், அவர்தம் கொள்கைப் பாய்ச்சல் தணியாத வேகத்தோடு, தன்னிகரற்றுப் பயணித்து, வெற்றிவாகை சூடுகிறது!

உருவத்தால் அவரை அருகில் நெருங்கி, பார்க்காத பல தலைமுறையினர் அவருடைய கொள்கை லட்சியங்களை சுவாசித்துப் பயனடைகின்றனர்! நன்றியை எதிர்பார்க்காத அந்த நாயகனின் மண்டைச் சுரப்பை தமது பேராயுதமாகக் கொண்டு, பொல்லாங்குகளைப் பொடிபடச் செய்கின்றனர்! விசித்திரமான தனித்தன்மை கொண்ட தன்னிகரற்ற தலைவர் அவர்!

**மானுடம் காத்த மருத்துவர்!**

வாழ்ந்த போது தன் வலிகளைப் பொருட்படுத்தாது, சமூகத்தின் வலி தீர்க்கவே ‘மானுடம்‘ காத்த மருத்துவராகியவர் அவர்! அவர் பாதை செறிவானது! அவரது லட்சியம் விரிவானது என்றும் தோற்காது!! காரணம், மானுடத்தின் மாண்பு நோக்கியது!

மனிதம் எங்கும் தழைக்கச் செய்வது விசாலப் பார்வை கொண்ட தத்துவ கர்த்தர் அவர் என்றும்! எதிர் நீச்சல் அவருக்கு வாடிக்கை எண்ணற்ற ஏளனங்கள் அவருக்கு சாதாரண வேடிக்கைகள்தான்! இவரது ஒப்பற்ற சுயசிந்தனை, புது உலகைக் கண்டது! ‘பேசு சுயமரியாதை உலகு’ என்று அதற்குப் பெயர் கொண்டது! சமத்துவமும், சுயமரியாதையும், பகுத்தறிவு படைக்கலன்களாக்கி, உரிமைப் போரின் களங்களில் பாதிக்கப்பட்டோரை நிறுத்தி, பாதகங்களை பனி போல் உறையச் செய்து, விரட்டிய வித்தகர்! அவர் பேசினார் எழுத்தறியாத மக்களிடையே அவர் எழுதினார் எழுத்தறிவைக் கற்றுத் தருவதில் வெற்றி பெற்ற நிலையில்! அவர் களங்கண்டார் உரிமைகளை வென்றெடுக்க! அவரே அனைத்துக்கும் தலைமையேற்ற ஆற்றலின் தொகுப்பாளர்! தனக்குப் பின்னாலும் தள்ளாடாத இயக்கம், தடுமாறாத கொள்கை, தரணி பாராட்டும் தொண்டர்கள் கொண்ட இயக்கத்தை பதவி நாடா, புகழ் தேடா, நன்றியை எதிர்பாரா தொண்டறத் தூய தனித் துறவிகளுக்குரிய பாசறையாக்கினார். 50 என்ன? 100, 500 ஆண்டுகளானாலும் “உலகம் பெரியார் மயமாகும் பெரியார் உலகமயமாவார்!” இது வெறும் கனவு அல்ல; விஞ்ஞான விதி சட்டம். வெற்றி நமதே, எந்த விலையும் கொடுக்கும் உறுதியும் நமதே!

கடந்த 50 ஆண்டுகாலம் தமிழ்நாட்டில் அவர் உடலால் இல்லாவிட்டாலும், அவரது கொள்கைப் பயணம் தொடர்கிறது! இனிவரும் உலகெங்கும் அவர் என்றும் நம் அறிவு வெளிச்சம் என்று உறுதியுடன் பணி தொடருவோம்! சூளுரைப்போம் சுயமரியாதை மறந்தவர்களுக்கு சூடேற்றுவோம்! ஒடுக்கப்பட்ட மக்களை என்றும் ஈடேற்றுவோம்! மானுடத்தின் மானமும், அறமும் காப்போம்! அய்யிரண்டு திசை முகத்தும் ஓரணியில் அதே பணி என்று சூளுரைத்துப் பணி தொடருவோம் பாதை மாறாமல்! தந்தை பெரியார் வாழ்க்கை முடிந்து 50 ஆண்டுகள் உருண்டோடி விட்ட நிலையில், அவரது லட்சியங்கள் கொள்கைகளின் சுற்றுப்பயணம், இந்தியா, தென்கிழக்காசியா தாண்டி உலக சுற்றுப் பயணத்தினை வெற்றிகரமாகச் செய்து கொண்டுள்ளது! பெரியார் உலகமயமாகிறார், உலகம் பெரியார்மயமாகி வருகிறது. பெரியார் என்பது தனிமனிதம் அல்ல, தோற்கடிக்கப்பட முடியாத தத்துவம். சமூக விஞ்ஞானம் மானுடத் தேவை எப்போதும் போல் இப்போதும் அது அறைகூவலைச் சந்தித்து எதிர்நீச்சலில் அயராமல் ஈடுபடுகிறது!

வருண பேதங்களை வற்புறுத்தும் ஹிந்துத்துவ ஹிந்தியாவை மாற்றியமைத்து பேதமில்லா பெருவாழ்வுக்கு ‘அனைவருக்கும் அனைத்தும்’ என்று தரும் திராவிட இந்தியாவை உருவாக்கி புதியதோர் வெளிச்சம் பெரியார் தர போராட சூளுரைப்போம். சுயமரியாதை நெறி பரப்புவோம்!

இவ்வாறு அவ்வறிக்கையில் கி.வீரமணி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### சுகாதாரத் திட்டங்களில்,

# செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்திட அரசிடம் திட்டங்கள் உள்ளதா?

## மக்களவையில் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, டிச.26-

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் 15.12.2023 அன்று மக்களவையில், சுகாதார திட்டங்களில், செயற்கை நுண்ணறிவை பயன்படுத்தவும், அதனால் ஏற்படும் தீய விளைவுகளை தடுக்கவும், ஒன்றிய அரசிடம் ஏதேனும் திட்டங்கள் உள்ளனவா? என்றும் அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும் ஒன்றிய அரசின் சுகாதா ரத் துறை இணையமைச்சர், பேராசிரியர் சத்ய பால் சிங் பாகேல் அவர்களிடம் கேள்வி எழுப்பினார்.



அதற்கு ஒன்றிய அரசின் சுகாதாரத்துறை இணைய மைச்சர் அளித்த பதில் பின் வருமாறு:

அனைத்து இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனம், டெல்லி, மற்றும் ரிஷிகேஷ் முதுகலை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம், சண்டிகர் போன்ற சிறப்புறு மருத்துவ மையங்களில் சுகாதார திட்டங்களில், செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி சாட், பார்ட், பெர்ட் போன்ற செயலிகளின் வழியாக நோயாளிகளுடன் கலந்துரையாடும் வசதி செய்யப்பட்டுள்ளது என்றும், இதன் தீய விளைவுகளை தடுக்கும் வகையில் ஒன்றிய அரசின் திட்டக் குழுவினால் பொறுப்புணர்ச்சியுடன் செயற்கை நுண்ணறிவு, செயற்கை நுண்ணறிவு கொள்கைகள் ஆகிய இரண்டு கொள்கை விளக்க கையேடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

மேலும், செயற்கை நுண்ணறிவின் தீய விளைவுகளிலிருந்து பாதுகாக்க, டிஜிட்டல் தனிநபர் தரவு பாதுகாப்பு சட்டம் 2023 நாடாளுமன்றத்தினால் ஆகஸ்ட் 2023ல் சட்டமாக்கப்பட்டுள்ளது என்றும், இதனால் ஆயுஸ்மான் பாரத் டிஜிட்டல் திட்டத்தின் பயனாளிகளுக்கு தனிநபர் தரவு பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒன்றிய அரசின் சுகாதாரத்துறை இணை \யமைச்சர் சத்யபால் சிங் பாகேல், பதில் அளித்துள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சார்பில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தமிழ்நாடு அரசின் முன்னாள் தலைமைச் செயலாளரும் ஒடிசா மாநில முன்னாள் ஆளுநருமான எம்.எம். ராஜேந்திரன் அவர்களின் இல்லத்திற்கு நேற்று (25.12.2023) சென்று, அவரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்.



நெல்லை மாவட்டத்தில் தொடர்ந்து பெய்த கனமழையின் காரணமாக சேதம் அடைந்த மேலநத்தம் பாலத்தை நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப் முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வுப்பணி மேற்கொண்டார். உடன் மாநகராட்சி துணை மேயர் ராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன், மேலப்பாளையம் மண்டல தலைவர் கஜீதா இக்லாம் பாசிலா, பகுதி செயலாளர் துபாய் சாகுல், வழக்கறிஞர் தினேஷ் உள்பட மாமன்ற உறுப்பினர்கள், கழகத்தினர் பலர் உள்ளனர்.



தூத்துக்குடியில் தந்தை பெரியார் அவர்களின் 50-வது நினைவு நாளையொட்டி அவரது திருவுருவச் சிலைக்கு நேற்று முன்தினம் அமைச்சர்கள் கீதாஜீவன், மா.சுப்பிரமணியன், கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.



தூத்துக்குடி மாவட்டத்தில் பெய்த அதிகனமழையினால் மக்களுக்கு நோய் தொற்று ஏற்படாமல் இருக்க, திருவைகுண்டம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு நோய் தடுப்பு சிறப்பு மருத்துவ முகாம்கள் 186 இடங்களில் நடத்திட ஏற்பாடுகள் செய்யப்பட்டு, நேற்று முன்தினம் (24.12.2023), பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்துறை அமைச்சர் எ.வ.வேலு, முதல் சிறப்பு மருத்துவ முகாமை, திருவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மேல்நிலைப் பள்ளியில் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வின்போது, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், பொதுப்பணித்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் பி.சந்தரமோகன், நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் இரா.சந்திரசேகர் மற்றும் நெடுஞ்சாலைத்துறை, பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர்கள் உடனிருந்தனர்.

### தூத்துக்குடி மாவட்டத்தில் 7-வது நாளாக தொடர்ந்து நெடுஞ்சாலைத் துறையினர் முழு வீச்சில் நிவாரணப் பணிகள்!

# சாலைகள் - பாலங்கள் சீரமைப்பு! போக்குவரத்து தொடங்கியது!

## திருவைகுண்டத்தில் அமைச்சர் எ.வ.வேலு பேட்டி!

திருவைகுண்டம், டிச.25-

முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தூத்துக்குடி மாவட்டத்தின் திருவைகுண்டம் மற்றும் ஆழ்வார்திருநகரி ஆகிய பகுதிகளில் 7வது நாளாக, மீட்புப் பணிகளை மேற்கொண்டு, நிவாரண உதவிகள், சாலைகள் மற்றும் பாலங்கள் சீரமைக்கும் பணிகளை ஒவ்வொரு நாளும் முழுவீச்சில், துறை அதிகாரிகளுடன் களத்தில் நின்று அமைச்சர் எ.வ.வேலு செயலாற்றிக் கொண்டு வருகிறார்.

கனமழையினால் மக்களுக்கு நோய்தொற்று ஏற்படாமல் இருக்க, தூத்துக்குடி மாவட்டத்தின் திருவைகுண்டம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு, நோய் தடுப்பு சிறப்பு மருத்துவ முகாம்கள் 186 இடங்களில் நடத்திட, 51 மருத்துவ குழுக்கள் அமைக்கப்பட்டு, தமிழ் நாடு அரசின் மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டு, நேற்று முன்தினம் (24.12.2023), அமைச்சர் எ.வ.வேலு முதல் சிறப்பு மருத்துவ முகாமை, திருவைகுண்டம் ஸ்ரீகுமர குருபர சுவாமிகள் மேல்நிலைப்பள்ளியில் தொடங்கி வைத்தார்.

அமைச்சர் எ.வ.வேலு செய்தியாளர்கள் சந்திப்பின்போது கூறியதாவது :

சிறப்பு மருத்துவ முகாம் மூலம் இன்று மதியம் 12.00 மணிவரை, 7,175 நபர்களுக்கு மருத்துவ சேவை வழங்கப்பட்டுள்ளது என்றும், கருங்குளம், ஆழ்வார் திருநகரி, திருவைகுண்டம் ஆகிய ஒன்றியங்களில், 87 ஊராட்சிகளில் இருக்கின்ற பாதிப்புகளை, ஊராட்சி பணியாளர்களை கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**லாரிகள் மூலம் குடிநீர்!**

ஏரல் பகுதியில், குரும்பல் என்னும் இடத்தில் உள்ள பாலத்திற்குப் பதிலாக, தற்காலிக சாலை, இரண்டு நாட்களில் முழு வீச்சில் அமைக்கப்பட்டுள்ளது. தாமிரபரணி ஆற்றில் 112 இடங்களில், கிணறுகள் அமைக்கப்பட்டு, குடிதண்ணீர் வழங்கப்பட்டு வந்தது. தற்போது மழைநீர் வெள்ளதால், மின் மோட்டார் பம்புகள் எல்லாம் அடித்துச் செல்லப்பட்டுள்ளது. தற்போது, ஊராட்சிகளுக்கு நகராட்சி நிர்வாகத்தின் சார்பாக, லாரிகளில் மூலம் குடி தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

மின்சாரப் பணிகளில், வீட்டு மின்சார இணைப்புகள், வியாபாரத்திற்கு வழங்கப்படும் மின்சார இணைப்புகள் மற்றும் விவசாயத்திற்கு வழங்கப்படும் மின்சார இணைப்புகள் உள்ளது. இதில், வீட்டு மின்சார இணைப்பும், வியாபாரத் திற்கு வழங்கப்படும் மின்சார இணைப்புகளும் 95% சதவீதப் பணிகள் நிறைவடைந்து விட்டது. மீதமுள்ள 5% சதவீதப் பணிகள் இன்று மாலையோ அல்லது நாளையோ முடிவடையும். இப்பணிகள் முடிவடைந்தவுடன், விவசாயத்திற்கு வழங்கப்படும் மின்சார இணைப்புப் பணிகள், மின்சார வாரிய பணியாளர்கள் மூலம் மேற்கொள்ளப்படும்.

தாமிரபரணி ஆற்றின் இரண்டு பக்கமுள்ள கரைகளை உயர்த்தி கட்டுவதற்கு, முதலமைச்சர் அவர்களிடத்தில் எடுத்துரைக்கப்படும்

மேலகடம்பாகுளம் என்னும் குளத்தில் இருந்து, அனைத்து குளங்களுக்கும் தண்ணீர் இங்கிருந்துதான் வழங்கப்பட்டு வருகிறது. இக்குளத்தை தூர்வாரும் பணிகள் மேற்கொள்ள, மீன்வளத்துறை அமைச்சர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி அவர்களிடத்தில் எடுத்துரைக்கப்படும்.

**சாலைகள் சீரமைப்பு!**

கனமழையினால் பாதிக்கப்பட்ட 4 மாவட்டங்களில், அதிகம் பாதிக்கப்பட்ட மாவட்டம்தூத்துக்குடி. மழை மற்றும் பேரிடர் காலங்களில் முதலில் பழுதடைவது சாலைகள்தான், அதில், திருநெல்வேலி மாவட்டத்தில் 44 இடங்களிலும், தூத்துக்குடி மாவட்டத்தில் 113 இடங்களிலும், தென்காசி மாவட்டத்தில் 13 இடங்களிலும், விருதுநகர் மாவட்டத்தில் 13 இடங்களிலும், நாகர்கோவிலில் 5 இடங்களிலும் சாலைகள் அடித்துச் செல்லப்பட்டு, சாலைகள் துண்டிக்கப்பட்டிருந்தது. நெடுஞ்சாலைத்துறை பணியாளர்கள், சாலை சீரமைப்புப் பணிகளை விரைவாகப் மேற்கொண்டதில், இன்று (24. 12.2023) நாகர்கோயிலில் 5 இடங்களிலும், விருதுநகர் மாவட்டத்தில் 13 இடங்களிலும், தென்காசி மாவட்டத்தில் 13 இடங்களிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் 42 இடங்களிலும் சாலை சீரமைப்புப் பணிகள் முடிக்கப்பட்டு, போக்குவரத்து தொடங்கப்பட்டது. மேலும், திருநெல்வேலி மாவட்டத்தில் மீதமுள்ள 2 இடங்களில் சீரமைப்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்பணி நேற்று (24.12. 2023) மாலைக்குள் நிறைவடைந்து, பேருந்து போக்குவரத்து தொடங்கிவிடும்.

கிராமப் பகுதிகளுக்கு சாலைகள் அமைக்கப்படும், கிராமச் சாலைகள் அலகின் மூலம், 4 தரைப்பாலங்களை, உயர்மட்டப் பாலங்களாக கோபாலபுரம், பொட்டல்ஊரணி, ஏரல், உமரிக்கோட்டம் ஆகிய இடங்களில் கட்டப்பட்டது. உயர்மட்டப் பாலம் கட்டும்பொழுது, மாற்றுச் சாலைகள் அமைக்கப்படுவது வழக்கம், அந்த மாற்றுச் சாலைகளும் மழைநீர் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டது. அந்த நான்குச் சாலைகளில், 3 சாலைகள் செப்பனிடப்பட்டு, போக்குவரத்து தொடங்கப்பட்டுவிட்டது. மீதமுள்ள ஒரு சாலையில் சீரமைப்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்பணி முடிந்தவுடன் போக்குவரத்து தொடங்கப்படும்.

தூத்துக்குடி மாவட்டத்தின் 113 சாலைகளில், 104 சாலைகள் சீரமைக்கப்பட்டு, பணிகள் நிறைவடைந்து விட்டன. மீதமுள்ள 9 சாலை சீரமைப்புப் பணிகள் இன்று (24.12. 2023) மாலைக்குள் நிறைவடைந்து விடும். இன்று முதல் தூத்துக்குடி மாவட்டத்தில் சாலைப் போக்குவரத்து இயல்பு நிலைக்குத் திரும்பும்.

**போக்குவரத்து தொடங்கி விடும்!**

மேலும், பாளையங்கோட்டை - திருச்செந்தூர் செல்லும் வழித்தடத்தில், 4 இடங்களில் சாலைகள் பழுதடைந்து, சாலைகள் துண்டிக்கப்பட்டிருந்தது. தொடர்ந்து 3 நாட்களாக முழுவீச்சில் இரவுபகல் பாராமல், தற்காலிக சாலை சீரமைப்புப் பணிகள் மேற்கொண்டதின் அடிப்படையில், இன்று (24.12. 2023) மாலைக்குள் போக்குவரத்து தொடங்கப்படும்.

பேரிடர் காலங்களில் சாலைகள் மிகவும் பழுதடைந்து விடுகிறது. அதனை சீர்செய்யும் பொருட்டு, தற்காலிக சாலைகள் அமைத்து போக்குவரத்தை சீர்செய்வது, மற்றும் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, முதலமைச்சர் அவர்கள் ஆணையின்படி, நிரந்தரமாக சாலைப் பணிகளை மேற்கொண்டு, சாலைகள் அமைக்கப்படும்.

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தொடர்ந்து 7வது நாட்களாக நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், அமைச்சர் அவர்களுடன் இணைந்து பணியாற்றிக்கொண்டுள்ளார். இந்த பேரிடர் மீட்புப் பணிகளில், தலைமைப் பொறியாளர்கள் 5பேர், கண்காணிப்புப் பொறியாளர்கள்6பேர், கோட்டப் பொறியாளர்கள் 10பேர், உதவிக் கோட்டப் பொறியாளர்கள்30பேர், உதவிப் பொறியாளர்கள்5பேர், சாலை ஆய்வாளர்கள் 75பேர், பல்வேறு கோட்டங்களில் இருந்து வரவழைக்கப்பட்ட சாலைப் பணியாளர்கள் 1150பேர் மற்றும் அன்றாட பணிகளுக்காக பணியாளர்கள் 2000பேர் ஆகிய அனைவரையும் கொண்டும், ஜே.சி.பி. இயந்திரங்கள்106, கிட்டாச்சி இயந்திரங்கள்20, லாரிகள்223 ஆகிய இயந்திரங்களைப் பயன்படுத்தியும், சீரமைப்புப் பணிகளை மேற்கொண்டதினால், பணிகளை விரைவாகவும், சிறப்பாக செய்து முடிக்க முடிந்தது.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு கூறினார்.

இந்த ஆய்வு பணிகளின் போது, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், பொதுப்பணித் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் பி. சந்தரமோகன், நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் இரா.சந்திரசேகர் மற்றும் நெடுஞ்சாலைத்துறை, பொதுப்பணித் துறை தலைமைப் பொறியாளர்கள் உடனிருந்தனர்.

### நெல்லை, தூத்துக்குடி, குமரி, தென்காசி மாவட்டங்களில்

# ரூ. 20.16 லட்சம் செலவில் 40 லட்சம் குளோரின் மாத்திரைகள் விநியோகம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

தூத்துக்குடி, டிச. 26 -

தென் மாவட்டங்களில் பெய்த கனமழையின் காரணமாக பாதிப்புக்குள்ளான தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி ஆகிய நான்கு மாவட்டங்களில் உள்ள அனைத்துத்தரப்பு மக்களும் நீரினால் பரவும் நோய்களிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில், முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, ரூ.20.16 இலட்சம் செலவில் 40 இலட்சம் குளோரின் மாத்திரைகள் கொள்முதல் செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படவுள்ளது. பொதுமக்களுக்கு குளோரின் மாத்திரைகளை விநியோகம் செய்யும் பணிகளை தொடங்கி வைக்கும் விதமாக, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (24.12.2023) ஏரல் பேரூராட்சிப் பகுதிகளில் வீடு வீடாகச் சென்று ஒவ்வொரு வீட்டிற்கு தலா 10 குளோரின் மாத்திரைகளை பொது மக்களிடம் வழங்கி, குளோரின் மாத்திரையை பயன்படுத்தும் முறைகள் குறித்து எடுத்துரைத்தார்.

தென் மாவட்டங்களில் பெய்த கனமழையினைத் தொடர்ந்து பொதுமக்களுக்கு, குடிநீர் வழங்கக்கூடிய நீர் ஆதாரங்கள் பாதிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பில்லாத குடிநீரை பருகுவதால் நீரினால் பரவும் நோய்களாகிய காலரா, வயிற்றுப்போக்கு போன்றவை பரவ வாய்ப்புகள் உள்ளது. இதனால் பொதுமக்கள் நன்கு கொதிக்க வைத்த குடிநீரையே பருக வேண்டும் என ஏற்கனவே பொது சுகாதாரத்துறையால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், பொதுமக்கள் குளோரின் மாத்திரையைப் பயன்படுத்தி சுத்திகரிக்கப்பட்ட பாதுகாப்பான குடிநீர் மட்டுமே குடிப்பதற்கும் சமைப்பதற்கும் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறது. 500 மில்லி கிராம் எடை கொண்ட ஒரு குளோரின் மாத்திரையில் 25 மில்லி கிராம் செயலூட்டப்பட்ட குளோரின் உள்ளது. ஒரு குளோரின் மாத்திரை, ஒரு குடம் குடிநீர் அல்லது 20 லிட்டர் குடிநீரில் கலந்து பயன்படுத்த வேண்டும்.

குளோரின் மாத்திரை குடிநீரில் கலந்த பின்பு இரண்டு மணி நேரம் கழித்து அக்குடிநீரை பருக/சமைக்க வேண்டும். குளோரின் மாத்திரையை நேரடியாக பொதுமக்கள் உட்கொள்ளக்கூடாது. குளோரின் மாத்திரை குழந்தைகள் கையில் கொடுக்கக் கூடாது. பெரியவர்களிடம் மட்டுமே வழங்கப்பட வேண்டும். குளோரின் மாத்திரைகள் பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்புத்துறையின் களப்பணியாளர்கள் மூலமாக வீடு வீடாக சென்று ஒவ்வொரு வீட்டிற்கும் தலா 10 குளோரின் மாத்திரைகள் வீதம் விநியோகிக்கப்படும்.

இந்த அவசரகால செயல்முறை (Emergency Public Helath Response) ஏற்கனவே நடைமுறையில் உள்ள குடிநீர் விநியோக முறை சரிசெய்யப்பட்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும்வரை மட்டுமே பின்பற்றப்பட வேண்டும்.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வின்போது, வணிகவரி மற்றும் பதிவுத் துறை பி.மூர்த்தி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.வெங்கடேசன் (சோழவந்தான்), அப்துல் சமது (மணப்பாறை), ஏரல் பேரூராட்சி மன்றத் தலைவர் திருமதி. சர்மிளா, இணை இயக்குநர் (தடுப்பூசிப் பணிகள்) மரு. வினைய், துணை இயக்குநர்கள் மரு.பொற்செல்வன் (தூத்துக்குடி), மரு.குமார் (கள்ளக்குறிச்சி), மரு.விஜய் (சிவகங்கை), வட்டார மருத்துவ அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### தமிழ்நாட்டு மக்களுக்கு

# எதிராக அப்பட்டமாக செயல்படுகிறார் அமைச்சர் நிர்மலா சீதாராமன்!

## விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் கண்டனம்!



சென்னை, டிச. 26 -

"வாயை வைத்துக் கொண்டு பொறுமையாய் இருப்பது நல்லது" என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆலோசனை கூறியுள்ளார். ஆனால் இந்த ஆலோசனையை கூறும் நிர்மலா சீதாராமன் அவருடைய வார்த்தைகள் எப்படி இருந்தன? என்பதை அவர் பேட்டியை பார்த்தவர்கள் அறிவார்கள். பேட்டியின் பொழுது அவரது முகம் கோபத்தில் கொப்பளித்ததை பார்க்க முடிந்தது. ஒரு மாநில அரசு, கடும் நெருக்கடியான நேரத்தில் இருக்கும் போது உதவுவதற்கு கோரிக்கை வைக்கிற பொழுது அது முடியாது என்று கூறுவதற்கு ஒரு பேட்டி; அதுவும் அவருடைய ஒவ்வொரு வார்த்தைகளும் ஆணவத்தின் வெளிப்பாடாக அமைந்திருந்தது. ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்களின் தமிழ்நாட்டுக்குத் துரோகமான இந்த செயலை விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது.

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டத்தில் கடந்த டிசம்பர் 4 ஆம் நாள் பெய்த கடும் மழையால் சென்னை மாநகரம் தத்தளித்தது. தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் அரசின் போர்க்கால நடவடிக்கையால் விரைவில் வெள்ளைச் சூழலில் இருந்து மக்கள் மீண்டனர். ஆனாலும் பாதிப்புகள் பெருமளவு ஏற்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து தென் மாவட்டங்களான தூத்துக்குடி, நெல்லை, கன்னியாகுமரி, தென்காசி போன்ற மாவட்டங்களில் கடந்த 17 மற்றும் 18 தேதிகளில் வரலாறு காணாத கடுமழை பெய்து, அந்த மாவட்டங்களை சின்னாபின்னமாக் கிணீயுள்ளது. மனித உயர் இழப்புகள், கால்நடைகள் இழப்பு, சாலைகள் துண்டிப்பு, வீடுகள் இடிந்து விழுந்தது, விவசாயப் பயிர்கள் பெரும் நாசம் என வரலாறு காணாத பேரிழப்பு ஏற்பட்டுள்ளது. அந்த மாவட்டங்களில் மீட்பு பணியை மேற்கொள்ள அமைச்சர்களை விரைந்து அனுப்பியதோடு, தொடர்ந்து அதிகாரிகளோடும் அமைச்சர்களோடும் இணைய வழியாக தொடர்பு கொண்டும் தான் நேரில் சென்றும் மீட்புப் பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் விரைவு படுத்தி வந்தார்கள்.

இப்படிப்பட்ட நிலையில் சென்னைப் பகுதியில் 50 ஆண்டுகாலம் இல்லாத அளவும், தென் மாவட்டகளில் 100 ஆண்டு காலம் இல்லாத அளவும் பெய்த பேய் மழையால் ஏற்பட்ட இந்த வரலாறு காணாத பெரும் பாதிப்பை தேசிய பேரிடராக அறிவிக்க வேண்டும் என்றும், ரூபாய் 21,600 கோடி நிவாரண பணிக்கு நிதி ஒதுக்கிட வேண்டும் என்றும் பிரதமரிடம் முதலமைச்சராக அவர்கள் நேரில் கோரிக்கை வைத்துள்ளார்கள். பிரதமரும் கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக உறுதி அளித்துள்ளார்கள்.

இந்த நிலையில் ஒன்றிய அரசிடம் மாநில அரசு நிதி கேட்டால், ஒன்றிய அரசு என்ன ஏ.டி.எம் ஆ? என ஒன்றிய அமைச்சர் கேட்டதற்கு, அமைச்சர் உதயநிதி அவர்கள், நாங்கள் அவர்கள் சொந்த அப்பாவின் பணத்தை கேட்கவில்லை, மாநில அரசு வழங்கிய வரிப்பணத்தில் இருந்து தான் கேட்கிறோம் என்று கூறியதற்கு; அப்பன் வீட்டு பணமா என்றெல்லாம் அமைச்சர் உதயநிதி வாயை விடுவது நல்லதல்ல என்று ஒன்றிய அமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவுரையை ஆவேசமாக வழங்குகிறார். பிறருக்கு அறிவுரை சொல்வதற்கு முன்பு தான் அதற்கு தகுதியானவராக நடந்து கொள்ள வேண்டும். அப்படி அந்த பேட்டியில் நிர்மலா சீதாராமன் நடந்து கொள்ளவில்லை என்பது வெட்கக்கேடானது.

முதலமைச்சர் வெள்ள பகுதிகளில் இல்லாமல் இந்தியா கூட்டணி கூட்டத்தில் கலந்து கொள்ள டெல்லி வந்ததாகவும், அந்த வாக்கில் பிரதமரை சந்தித்ததாகவும் கூறுகிறார். இந்தியா கூட்டணி கூட்டம் என்பது ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்ட ஒன்று. வெள்ளத்தால் குறிப்பிட்ட பகுதியில் ஏற்பட்ட கேடுகள் மிக மோசம். அதை விட ஒன்றிய பா.ஜ.க. அரசின் சர்வாதிகார செயல்களால் ஜனநாயகத்திற்கு மாபெரும் கேடு ஏற்பட்டுள்ளது. அந்த கேடையையும் களைய வேண்டிய கடமை ஜனநாயக நம்பிக்கை உள்ள அனைத்துத் தலைவர்களுக்கும் உண்டு. அந்த அடிப்படையில் டெல்லிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் வந்தார். ஆனால் அதற்கு முன்னரே பிரதமரிடம் சந்திப்பதற்கு நேரம் கேட்டு, அவர் கொடுத்த நேரத்தில்தான் முதலமைச்சர் பிரதமரை சந்தித்துள்ளார்.

ஆனால் இவற்றையெல்லாம் மறைத்துவிட்டு அற்ப அரசியலுக்கு அப்பட்டமாக நிர்மலா சீதாராமன் பேசியிருப்பது வெட்கக்கேடானது, வேதனையானது. தமிழ்நாட்டைச் சேர்ந்த இவர் அமைச்சரான பிறகு, மாநிலத்தின் நலனை கருத்தில் கொள்ளாமல், அடாவடித்தனமாக தமிழ்நாட்டு மக்களுக்கு எதிராக நிர்மலா சீதாராமன் பேசுகிறார். ஒட்டு மொத்தத்தில் தமிழ்நாட்டுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அப்பட்டமாக எதிராக செயல்படும் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்களை விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது என பொன்குமார் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

# தூத்துக்குடி சுங்கச்சாவடிகளில் டிச.31ஆம் தேதி வரை வாகனங்களுக்கு கட்டணம் விலக்கு!

தூத்துக்குடி, டிச.26

அதி கனமழையால் பாதிக்கப்பட்டுள்ள தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள சுங்கச்சாவடிகளில் டிச.31 ஆம் தேதி வரை வாகனங்களுக்கு சுங்கக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்படுவதாக மாவட்ட கலெக்டர் லட்சுமிபதி தெரிவித்துள்ளார். அதி கனமழையால் மாவட்டத்தில் பெரும்பாலான கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து மாவட்டத்திற்கு தன்னார்வலர்கள், பொதுநல அமைப்புகள் நிவாரண பொருள்கள் வழங்கி வருகின்றனர். இந்த நிலையில், பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான நிவாரண பொருள்களை வாகனங்களில் சிரமமின்றி கொண்டு செல்வதற்காக, தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள சுங்கச்சாவடிகளுக்கு டிச.31-ஆம் தேதி வரை அனைத்து வாகனங்களுக்கும் சுங்க கட்டணம் செலுத்துவதிலிருந்து கட்டண விலக்கு அளித்து உத்தரவிட்டுள்ளார்.



புதுடெல்லியில் ஒன்றிய ரயில்வே அமைச்சரை தருமபுரி நாடாளுமன்ற கழக உறுப்பினர் டாக்டர் செந்தில் குமார் சந்தித்து, தருமபுரி – சென்னை ரயில்வே திட்டத்திற்கு நிலம் கையகப்படுத்தும்போது, விவசாய நிலங்கள் பாதிக்காத வண்ணம் பார்த்துக் கொள்ள கேட்டுக் கடிதம் அளித்தார்.



சேலம் மாவட்டம் ஆத்தூர் நகராட்சி மன்ற தலைவர் , துணைத் தலைவர் ,மற்றும் வார்டு உறுப்பினர்கள் ஏற்பாட்டில் தூத்துக்குடி மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ. 5 லட்சம் மதிப்பிலான நிவாரணப் பொருட்கள் ஆத்தூர் நகராட்சி அலுவலகத்தில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டது. இதில் ஆத்தூர் நகர செயலாளர் பாலசுப்பிரமணியன், நகராட்சி மன்ற தலைவர் நிர்மலா பபிதா, நகராட்சி மன்ற துணை தலைவர் கவிதா ஸ்ரீராம் மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள், நகர நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# பேரிடரையும் புறக்கணிக்கும் பேரரசா ஒன்றிய அரசு?

**வெ**ந்த புண்ணில் வேலை பாய்ச்சுவது என்று சொலவடையாகக் கூறுவார்கள். தமிழ்நாடு சந்தித்த கடும் இயற்கைப் பேரிடர்களுக்கான கூடுதல் நிவாரண நிதி கோரிக்கை குறித்து ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பேசிய ஆணவப்பேச்சு அனைத்துத் தரப்பினரையும் கொந்தளிக்க வைத்துள்ளது.

கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள லட்சக்கணக்கான மக்களைக் குறித்து எந்த கவலையும் இல்லாத, கருணையும் இல்லாத ஒன்றிய நிதியமைச்சரின் பேச்சு ஆட்சியாளர்களின் மமதை எந்த அளவு செல்லும் என்பதையே காட்டுகிறது. இத்தனைக்கும் அவர் தப்பும், தவறுமாகப் பேசினாலும், தமிழிலேயே பேசியதுதான் மக்களின் வேதனை அதிகரிக்கக் காரணம்.

வரலாறு காணாத, வானிலை ஆய்வுகளின் கணிப்புகளின் எல்லைக்கு அப்பாற்பட்ட கடும் மழைப்பொழிவுகள் தலைநகர் சென்னையையும், அதை அடுத்து தென் மாவட்டங்களையும் நிலைகுலையச் செய்துள்ளன. முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாலும், அயரா களப்பணியாலும் மக்களை ஒட்டுமொத்த பாதிப்பிலிருந்து கூடியவரை காத்துள்ளது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தமிழ்நாட்டு அரசாங்கம். ஆனாலும் இயற்கைப் பெருஞ்சீற்றம் மக்களின் வாழ்வினை சீர்குலைத் துள்ளது.

வழமையான பருவ கால மழை, வெள்ளம், புயலைத் தாண்டிய இந்த கடும் பேரிடரின் தாக்கத்தை எதிர்கொண்டு மீட்பு பணி செய்ய கூடுதல் நிவாரண நிதி கேட்டு ஒன்றிய அரசை அணுகியது தமிழ்நாடு அரசு. உடனடியாக 2,000 கோடி ரூபாயை தேசிய பேரிடர் நிதியிலிருந்து இடைக்கால நிவாரணமாக ஒதுக்கச் சொல்லி கோரியது.

இது தேசிய பேரிடர் நிவாரண நிதி உருவாக்கப்பட்டதற்கான மூலகாரணத்தை ஒட்டிய கோரிக்கையாகும். இது விதிமுறைகளுக்கு அப்பாற்பட்டதோ, தேசிய பேரிடர் நிதியின் நோக்கங்களுக்கு அப்பாற்பட்டதோ அல்ல. அந்த நிதியின் நோக்கமே வழக்கத்தை விட கடுமையான இயற்கைச் சீற்றங்களை மாநிலங்கள் சமாளிக்க கூடுதல் நிதியைத் தருவது தான்.

**பிறகு எந்த காரணத்தால் ஒன்றிய நிதியமைச்சர் கடும் சொற்களைப் பேச வேண்டும்? ஏன் அமைச்சர் உதயநிதி அமைச்சரின் மரியாதைக்குரிய அப்பா வீட்டு சொத்தை கேட்கவில்லை என்று காட்டமாகச் சொல்ல நேர்கிறது? ஏன் தினமலர் நாளிதழ் உதய நிதி காசுக்காக நிர்மலா சீதாராமனிடம் கையேந்துவதாக கேலிச்சித்திரம் வரைகிறது?**

**இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் ஒன்றிய அரசிடம் குவிந்துள்ள அதிகாரம். அதனை கூட்டாட்சி குடியரசாக உணரச்செய்யாமல் ஒரு பேரரசாக உணரச் செய்வதுதான் என்று எண்ணாமல் இருக்க முடியவில்லை. இது சாதாரணமாக கூட்டாட்சிகளில் ஏற்படக்கூடிய நடைமுறைச் சிக்கல் போன்றதல்ல. கூட்டாட்சி தத்துவத்தையே குழிதோண்டிப் புதைக்கக் கூடிய பா.ஜ.க. அரசாங்கத்தின் ஆணவமாகும். பிரச்சினையை விரிவாக அலசுவோம்.**

### தேசியப் பேரிடர் நிதியும், மாநிலப் பேரிடர் நிதியும்

அரசின் எல்லா நிதிகளும் வரி வசூல் மூலமாகவே உருவாகிறது என்பது வெளிப்படையானது. அதாவது மக்களின் வரிப்பணமே அரசின் மூலாதாரம். இந்திய ஒன்றியத்தைப் பொறுத்தவரை வருமான வரி என்பது ஒன்றிய அரசினால் மட்டுமே வசூலிக்கப்படுகிறது. விற்பனை வரி விதிப்பு மாநிலங்களிடம் இருந்தது, சமீபத்தில் ஜி.எஸ்.டி. என்ற வடிவில் ஒன்றிய அரசினால் வசூலிக்கப்பட்டு பின்னர் மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

எனவே வரி வருவாய் என்பதில் மாநில அரசுகளுக்கென தனியான வரி விதிப்பு வாய்ப்புகள் அதிகம் இல்லை. ஒரு சில அம்சங்கள் மட்டுமே அதன் வருவாய்க்கு வழியாக உள்ளன. மாநில அரசு ஒன்றிய அரசின் நிதிப் பகிர்வையே பெருமளவு சார்ந்துள்ளது. ஆனால் வரி செலுத்தும் மக்கள் அனைவரும் வெவ்வேறு மாநிலங்களில்தான் வாழ்கிறார்கள் என்பதையும் நாம் மறந்துவிட முடியாது.

இந்த நிலையில் இயற்கைச் சீற்றம், பேரிடர்களின் தாக்கத்தால் பாதிக்கப்படும் மக்களுக்கு நிவாரணம் அளிப்பது மாநில அரசுகளின் பொறுப்பாகவே உள்ளது.



ஒன்றிய அரசு தேசிய பேரிடர் நிதி (National Disaster Response Fund) என்று ஒன்றை செஸ் என்ற கூடுதல் வரிகளை ஒரு சில பொருட்கள் மேல் விதிப்பதால் வசூலிக்கிறது. இந்த நிதிக்கு தனி நபர்களும் நன்கொடை வழங்கலாம். பின்னர் அதன் ஒரு பகுதியை மாநில பேரிடர் நிதி (State Disaster Response Fund) உருவாக்கத்துக்குக் கொடுத்து விடுகிறது. ஒன்றிய அரசு 75%, மாநில அரசு 25% பங்களித்து மாநில பேரிடர் நிதி உருவாக்கப்படுகிறது.

**ஆனால், ஒரு மாநிலத்தில் ஒரு சந்தர்ப்பத்தில் ஏற்படும் பேரிடரின் கடுமை அதிகமாக இருந்தால் அந்த மாநிலத்தின் பேரிடர் நிதியிலிருந்து மட்டும் அதனால் நிவாரணம் அளிக்க முடியாது. அப்படிப்பட்ட கடுமையான பாதிப்புகள் ஏற்படும்போது மாநிலங்கள் ஒன்றிய அரசிடம் கூடுதல் ஒதுக்கீட்டை தேசிய பேரிடர் நிதியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம் என்பதே இந்த நிதியின் நிர்வாக விதி.**

பேரிடர் நிதி மேலாண்மைக்காக 2010ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளின் விதி 3.1 தெளிவாக இந்த நோக்கத்தைக் கூறுகிறது.

3.1 Natural Calamities of cyclone, drought, earthquake, fire, flood, tsunami, hailstorm, landslide, avalanche, cloud burst and pest attack considered to be of severe nature by Government of India and requiring expenditure by a State Government in excess of the balances available in its own State Disaster Response Fund (SDRF), will qualify for immediate relief assistance from NDRF.


**ராஜன் குறை கிருஷ்ணன்**
*பேராசிரியர்*
*அம்பேத்கர் பல்கலைக் கழகம், புதுடெல்லி.*




**தமிழில்: புயல், பஞ்சம், நிலநடுக்கம், நெருப்பு, வெள்ளம், சுனாமி, ஆலங்கட்டி மழை, நிலச்சரிவு, பனிப்பாறைச் சரிவு, மேக உடைப்பு மற்றும் கிருமி தாக்குதல் ஆகிய இயற்கைப் பேரிடர்களின் தன்மையை கடுமையானதாக ஒன்றிய அரசு மதிப்பிடுவதும், மாநில அரசின் வசமுள்ள மாநில பேரிடர் நிதியை விட அதிகமான நிதி நிவாரணத்துக்கு தேவைப்படுவதும், தேசிய பேரிடர் நிதியிலிருந்து உடனடி நிவாரணம் பெறுவதற்கான தகுதிகளாகும்.**

இதிலிருந்து நாம் புரிந்துகொள்வது என்ன? இரு விதங்களில் தேசிய பேரிடர் நிதி, மாநில பேரிடர்களைச் சந்திக்க பகிரப்படுகிறது.

ஒவ்வோர் ஆண்டும் முன் தீர்மானிக்கப்பட்ட அளவு நிதி மாநில பேரிடர் நிதிக்கு வழமையான பாதிப்புகளைச் சமாளிக்க தரப்படும் (தமிழ்நாட்டுக்கு இவ்வகையில் வழங்கப்படுவது ரூ.900 கோடி).

மேலதிகமாகக் கடுமையான பாதிப்புகள் ஏற்படும்போது மாநில அரசுகள் மேலதிக நிதியைக் கோரிப்பெறலாம் (தமிழ்நாடு உடனடி இடைக்கால நிவாரண தொகையாகக் கேட்பது ரூ.2,000 கோடி).

### யாரை குழப்புகிறார் நிர்மலா சீதாராமன்?

தமிழ்நாடு மிகக் கடுமையான வெள்ளத்தையும், மழைப்பொழிவையும் சந்தித்துள்ளதால் அதன் நிர்ணயிக்கப்பட்ட மாநில பேரிடர் நிதியான 1,200 கோடி ரூபாய் நிவாரணத்துக்குப் போதாது என்று மதிப்பிட்டு, கிட்டத்தட்ட 12,000 கோடி ரூபாய் நிவாரண உதவிகள் செய்ய தேவைப்படும் என்று கருதுகிறது. அதனால் உடனடி இடைக்கால நிவாரணமாக 2,000 கோடி ரூபாயாவது தேசிய நிதியிலிருந்து விடுவிக்கச் சொல்லி கோருகிறது.

இப்படி தேசிய பேரிடர் நிதியிலிருந்து கூடுதல் பணம் வேண்டுமென்றால் ஒன்றிய அரசு பேரிடரை “கடுமையான பேரிடர்” என்று அங்கீகரிக்க வேண்டுமென்று பார்த்தோம். அதன் பிறகு செலவுகளைச் சமாளிக்க மாநில பேரிடர் நிதி போதாது என்பதையும் ஏற்கும்போதுதான் அது கூடுதல் நிதியைத் தரும்.

இந்த அங்கீகாரத்தைத்தான் “தேசிய பேரிடர்” என்று அறிவிக்க கோருவதாக பொதுவழக்கில் கூறப்படுகிறது. எந்த பேரிடரும் ஒட்டுமொத்த தேசத்தையும் தாக்காது; ஒரு சில மாவட்டங்களைத்தான் பெரிதும் தாக்கும். ஆனால், கூடுதல் நிவாரணத் தொகை தேசிய பேரிடர் நிதியிலிருந்து வருவதால்தான் அதை தேசிய பேரிடர் என்று குறிப்பிடுகிறார்கள்.



**இந்த எளிய உண்மையை திரித்துப் பேசிய ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் “தேசிய பேரிடர்வு” என்று எதையும் அறிவிப்பதில்லை என்று மீண்டும், மீண்டும் சொன்னார். பேரிடர் என்ற வார்த்தையை தவறாகப் “பேரிடர்வு” என்று கூறினாலும், அதை வாய் தவறி சொல்லாமல் பல முறை அழுத்தம் திருத்தமாக “பேரிடர்வு” என்றே கூறினார். உச்சகட்ட மமதை அவர் கூற்றில் வெளிப்பட்டது.**

**சென்னையிலும், தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களிலும் வீடு வாசலை விட்டு வெளியேறி அகதிகளாக இருக்கும் மக்களின் நிலையை ஒரு நிமிடமாவது எண்ணிப்பார்த்திருந்தால் அவர் இப்படிப் பேசியிருப்பாரா? அவர் என்ன சொல்லியிருக்க வேண்டும்?**

“ஒன்றிய அரசு மாநில பேரிடர் நிதிக்குரிய தொகையை முன் கூட்டியே கொடுத்துவிட்டது. கூடுதல் நிதி கொடுப்பது குறித்து விரைவில் முடிவெடுக்கிறோம். மக்களுக்கு ஏற்பட்ட துன்பங்கள் கவலையளிக்கின்றன. நிச்சயம் ஆய்வுக்குழுவின் அறிக்கையை ஆராய்ந்து பார்த்து ஆவன செய்வோம்” என்று கூறியிருந்தால் அது கண்ணியமான சொற்களாக இருந்திருக்கும்.

**ஆனால் மாநில பேரிடர் நிதிக்கு வழமையாக வழங்க வேண்டிய நிதியைக் கொடுத்ததே ஏதோ இந்த கடும் பேரிடரை சந்திக்கக் கொடுத்தது போலத் திரித்துப் பேசுவதும், பேரிடரின் கடுமையைக் குறித்த மாநில அரசின் அறிவிப்பினை அவமதித்து ஏளனம் செய்யும் வகையில் பேசுவதும் ஆணவப் போக்கினையே வெளிப்படுத்துகிறது.**

### யார் வீட்டு சொத்து?

**தேசியப் பேரிடர் நிதி எங்கிருந்து வருகிறது? ஒன்றிய அரசு நிலவில் பயிர் செய்து கொண்டு வருகிறதா? அது தமிழ் நாட்டு மக்களும் தரும் வரிப்பணம்தானே? இங்கே புகைக்கப்படும் ஒவ்வொரு சிகரெட்டிலிருந்தும் பெறப்படும் செஸ் வரியும்தானே தேசிய பேரிடர் நிதி? அது மாநிலங்கள் தேவைப்பட்டால் கேட்டுப் பெறத்தானே இருக்கிறது?**

**இதைச் சுட்டிக்காட்டத்தான் அமைச்சர் உதயநிதி உங்கள் “மரியாதைக்குரிய” அப்பாவின் வீட்டு சொத்தா என்று கேட்டார். ஒன்றிய ஆட்சியாளர்கள் தங்கள் பதவிக்குரிய கண்ணியத்துடனும், பொறுப்புடனும், மக்கள் மீதான அக்கறையுடனும் பேசினால் இது போல கேட்க வேண்டிய தேவை எழாது.**

உண்மையில் பேரிடர் எவ்வளவு கடுமையானது, அதற்கு நிவாரணம் வழங்க எவ்வளவு பணம் தேவைப்படும் என்பதையெல்லாம் கணக்கீடு செய்ய கால அவகாசம் தேவைப்படும். ஆனால் சேதங்களின் பரிமாணம் கண்கூடாக இருக்கும்போது இது “கடுமையான” பேரிடர், ஆங்கிலத்தில் சொன்னால் “Severe” என்பதையும், அதற்கு மாநில நிதியான 1200 கோடி ரூபாய் போதாது என்பதையும் மதிப்பிட அதிக அவகாசம் தேவையில்லை.

எனவே இடைக்கால நிதியாக மாநில அரசு கேட்கும் கூடுதல் 2,000 கோடி ரூபாயை உடனே ஒன்றிய அரசு விடுவிக்க வேண்டும். ஏனெனில் வழிகாட்டு நெறிமுறைகளில் “உடனடி” (Immediate) என்ற வார்த்தையும் இடம் பெற்றிருப்பதை மேலே காட்டிய விதிமுறை 3.1இல் காணலாம். பின்னர் விரிவான கணக்கீட்டிற்குப் பிறகு கூடுதல் தொகையைத் தரலாம்.

### பேரரசாக கருதிக்கொள்கிறதா ஒன்றிய அரசு?

**தினமலர் நாளேடு கருத்தியல் அளவில் பாரதீய ஜனதா கட்சியை ஆதரிக்கக் கூடியது என்பது அனைவரும் அறிந்ததே. ஆனால், அது அரசியலமைப்பு சட்டம் வகுத்துள்ள கூட்டாட்சி தத்துவத்தை மதிக்க வேண்டும். ஒன்றிய நிதியமைச்சர் கையில் பணத்தை வைத்து விசிறிக்கொள்வது போலவும், அமைச்சர் உதய நிதி அவரிடம் யாசகம் கேட்பது போலவும் கேலிச்சித்திரம் வரைவது அரசியலமைப்பு சட்டத்தை கேவலப்படுத்துவதாகும்.**

**மாநில அரசுகள் ஒன்றிய அரசுக்கு கப்பம் கட்டும் சிற்றரசுகள் அல்ல. ஒன்றிய அரசு அவற்றை அடக்கி ஆளும் பேரரசும் அல்ல. இறையாண்மை, இறையாண்மை என்று மூச்சுக்கு முந்நூறு முறை புலம்பும் பா.ஜ.க. கட்சியினர் இறையாண்மை அரசிடம் இல்லை, அது மக்களிடம் இருக்கிறது என்பதை புரிந்துகொள்ள வேண்டும். ஏனெனில் இது மக்களாட்சி.**

அனைத்து மாநில மக்களின் உழைப்பில்தான், உற்பத்தியில்தான், வரிப்பணத்தில்தான் தேசம் என்பது சாத்தியமாகிறது. அதிகாரம் என்பது அவர்கள் கையில்தான் உள்ளது. ஆட்சியாளர்கள் மக்களுக்கு சேவை செய்யவே அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். ஒன்றிய அரசாங்கத்தை வாக்களித்து உருவாக்கிய மக்கள்தான், மாநில அரசையும் வாக்களித்து உருவாக்கியுள்ளார்கள்.

**மாநில மக்களுக்கு ஒரு பேரிடர் பாதிப்பு என்றால் அவர்கள் ஏன் யாசகம் கேட்க வேண்டும்? யாரிடம் கேட்க வேண்டும்? அவர்கள் உரிமையைத்தான் கேட்கிறார்கள். மாநில அரசாங்கம் அதனால் ஆன அனைத்தையும் செய்து வருகிறது. மேலும் மேம்பட்ட நிவாரணம் வழங்க அதற்கு கூடுதல் நிதி தேவைப்படுகிறது. அதைக் கேட்டால் அதன் பெயர் யாசகமா? அமைச்சர் உதயநிதியின் சுயமரியாதை மிக்க உரிமைக்குரலைக் கேட்டு மிரண்டுதானே தினமலர் கேலிச்சித்திரம் வரைகிறது?**

ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் இது வரை மக்களை தேர்தல் களத்தில் சந்தித்ததில்லை. வாக்கு கேட்டதில்லை. கட்சியால் மாநிலங்களவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அமைச்சராகி விடுகிறார். அவர் மாநிலங்களவை உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு எதிர்வரும் 2024 தேர்தலிலாவது மக்களவை தொகுதி ஒன்றில் களம் காண வேண்டும். அப்போதுதான் இது மக்களாட்சி என்று அவருக்குப் புரியும்.

**தினமலர் நாளேடு மக்கள் வாங்குவதால்தான் நிலைத்திருக்கிறது. மக்கள் உணர்வுகள் புரியாமல் அது கேலிச்சித்திரம் வரைந்தால் அதையும் ஒரு நாள் மக்கள் புறக்கணிக்கக் கற்பார்கள். மக்களாட்சியில் மக்களின் உரிமைகளுக்குக் குரல் கொடுக்க வேண்டிய ஊடகங்களே ஆட்சியாளர்களின் ஆணவத்துக்கு வெண்சாமரம் வீசக்கூடாது.**


நன்றி :
**‘மின்னம்பலம்’**
இணையதளம்




திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், மாவட்டத்தில் பெய்துள்ள கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ள சேதங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்து அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம், தலைமைச்செயலாளர் சிவ்தாஸ் மீனா தலைமையில், 24.12.2023 அன்று நடைபெற்றது. உடன், கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிர்வாக ஆணையர் எஸ்.கே.பிரபாகர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் பா.பொன்னையா, மாவட்ட கண்காணிப்பு அலுவலர்/ தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச்செயலாளர் மரு.இரா.செல்வராஜ், குடிநீர் வழங்கல் வாரிய மேலாண்மை இணை இயக்குநர் வே.சரவணன், மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன் உட்பட அனைத்துத்துறை அலுவலர்கள் உடன் உள்ளனர்.




தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 2வது பொதிகை புத்தக கண்காட்சி மாவட்ட ஆட்சியர் துரை.ரவிச்சந்திரன் தலைமையில் தனுஷ் எம்.குமார் எம்.பி.தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்.எல்.ஏ. பழனி நாடார் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர்பத்மாவதி,நகர்மன்றத்தலைவர்உமாமகேஸ்வரி,ஒன்றியக்குழுதலைவர்லாலாசங்கரபாண்டியன்,வருவாய் கோட்டாட்சியர் சுப்புலட்சுமி, காவல்துறை துணை கண்காணிப்பாளர் சுதிர் உள்பட பலர் உள்ளனர்.



திருநெல்வேலி மாவட்டம், அரசு மருத்துவக்கல்லூரி, மருத்துவமனையில் கனமழையின் போது தண்ணீர் தேங்கி மறு சீரமைக்கப்பட்டதை தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் தலைமையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார். உடன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன் தீப் சிங் பேடி, மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன், பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.செல்வவிநாயகம், மருத்துவ கல்வி இயக்குநர் மரு.சங்குமணி, பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் அப்துல் வகாப், திருநெல்வேலி மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன் உட்பட பலர் உள்ளார்கள்.

### ஆட்சியர் துரை.ரவிச்சந்திரன் தலைமையில்

# சங்கரன் கோவிலில் 2வது பொதிகை புத்தகக் கண்காட்சி!

## தனுஷ் எம்.குமார் எம்.பி. - ராஜா எம்.எல்.ஏ. - பழனி நாடார் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

தென்காசி, டிச. 26 -

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் கோமதி அம்பாள் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 2வது பொதிகை புத்தகக் கண்காட்சி மாவட்ட ஆட்சியர் துரை.ரவிச்சந்திரன் தலைமையில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ் எம். குமார், தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்.எல்.ஏ., தென்காசி சட்டமன்ற உறுப்பினர் பழனி நாடார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் துரை. இரவிச்சந்திரன் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி தென்காசி மாவட்டத்தில் 2வது பொதிகை புத்தக கண்காட்சி 24.12.2023 முதல் 02.01.2024 வரை 10 நாட்கள் நடைபெறுகிறது. அதன் அடிப்படையில் ஏராளமான பள்ளி, கல்லூரி மாணவர் மாணவியர் மற்றும் பொதுமக்கள் புத்தகத்தினை வாங்கி வாசிப்பின் முக்கியத்துவத்தினை அறிந்து கொண்டு வாங்கி புத்தகத்தை தன் படிப்பிற்காக பயன்படுத்தி பயன் பெற வேண்டும்.

புத்தகக் கண்காட்சியில் தினசரி நிகழ்வாக காலையில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ,மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகள், சுரண்டை காமராஜர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி சார்பில் பாரம்பரிய உணவுத் திருவிழா, மாவட்ட வாழ்வாதார இயக்கம் சார்பில் கண்காட்சிகள்,பள்ளி கல்வித்துறையின் இல்லம் தேடி கல்வி,எண்ணும் எழுத்தும், நான் முதல்வன் உள்ளிட்ட திட்டங்களின் கண்காட்சி பள்ளி கல்வித்துறை,பொது நூலக இயக்கம் மாவட்ட நிர்வாகம் சார்பில் சங்கப்புலவர் மாங்குடி மருதனார் அரங்கில்,60 புத்தக அரங்கில் லட்சக்கணக்கான புத்தகங்கள், சுய உதவி குழுவினர் அரங்கங்கள், உணவு திருவிழா,பட்டிமன்றம், எழுத்தாளர்களின் உரை நூல் வெளியீடு, புகைப்பட கண்காட்சி, வில்லிசை, கிராமிய கலை நிகழ்ச்சிகள், நாட்டுப்புற நிகழ்வுகள் என பல்சுவைகளுடன் நடைபெற உள்ளது. எனவே பொதுமக்கள் மற்றும் மாணவ, மாணவியர் அனைவரும் கண்டு களித்து வாசிப்பின் முக்கியத்துவத்தை அறிந்து பயன்பெற வேண்டும்.

இவ்வாறு மாவட்ட ஆட்சியர் துரை. ரவிச்சந்திரன் தெரிவித்தார்.

நிகழ்வில் எழுத்தாளர் தமிழ்ச்செல்வன் அவர்களின் வாசிப்பின் வாசல்கள் என்ற தலைப்பிலும், திரைப்பட இயக்குனர் எழுத்தாளர் ஜிப்சி ராஜ்குமார் அவர்களின் புத்தகங்கள் திரைப்படங்கள் என்ற தலைப்பிலும்,

மற்றும் அகிலாண்டபாரதி அவர்களின் கொஞ்சம் மருத்துவம் நிறைய மனிதன், ஒற்றை அண்டங்காக்காய் ஆகிய நூல் வெளியீடு, சொற்பொழிவு நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் பத்மாவதி,சங்கரன்கோவில் நகர மன்ற தலைவர் உமா மகேஸ்வரி, ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் லாலா சக்கரபாண்டியன், மாவட்ட நூலக அலுவலர் மீனாட்சி சுந்தரம், நூலகர்கள், கோமதிநாயகம்,முருகன்,மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் முத்தையா,

சங்கரன்கோவில் வருவாய் கோட்டாட்சியர் சுப்புலட்சுமி, சங்கரன்கோவில் காவல்துறை துணை கண்காணிப்பாளர் சுதிர், சங்கரன்கோவில் வட்டாட்சியர் பாபு உள்பட அரசு அலுவலர்கள்,கழக நிர்வாகிகள், பொதுமக்கள், மாணவ மாணவியர் திரளாக கலந்து கொண்டனர்.

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

# அண்ணாவின் முதுமொழியை நிறைவேற்றுகிறார்!

## ‘தினத்தந்தி’ நாளேடு புகழாரம்!

சென்னை, டிச. 26 -

‘மக்களிடம் செல், அவர்களோடு வாழ், அவர்களிடமிருந்து கற்றுக் கொள், அவர்களை நேசி, அவர்களுக்கு சேவை செய்’ என்கிற அறிஞர் அண்ணாவின் முதுமொழியை அவரது வழித் தோன்றலாய் நிறைவேற்றிக் காட்டிவிட்டார் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் என்று ‘தினத்தந்தி’ நாளேடு தனது தலையங்கத்தில் புகழாரம் சூட்டியுள்ளது.

உங்களைத் தேடி உங்கள் ஊருக்கு வருகிறார் கலெக்டர்! என்ற தலைப்பில் நேற்று ‘தினத்தந்தி’யில் வெளியான தலையங்கம் வருமாறு:-



தலையங்கம்
தினத்தந்தி
25.12.2023
உங்களைத் தேடி உங்கள் ஊருக்கு வருகிறார் கலெக்டர்!

மக்கள் தங்கள் குறைகளுக்கு தீர்வுகாண கலெக்டர் உள்ளிட்ட அதிகாரிகளை சந்திக்க, கால்கடுக்க நின்று மனு கொடுத்த காலம் எல்லாம் போய்விட்டது. இப்போது மக்களை அதிகாரிகளே தேடிவரும் காலம் வந்துவிட்டது. இந்தக் கொள்கையை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆட்சிக்கு வருவதற்கு முன்பே தொடங்கிவிட்டார். தேர்தல் பிரசாரத்திற்கு ஒவ்வொரு ஊருக்கும் அவர் சென்றபோது, உங்கள் தொகுதியில் ஸ்டாலின்” என்று எழுதப்பட்ட ஒரு பெட்டியை மேடையில் வைத்திருந்தார். அந்தத் தொகுதி மக்கள், தங்கள் குறைகளை மனுவாக எழுதி அதில் போடலாம். அந்தப் பெட்டியை பூட்டி அதன் சாவியைத் தானே வைத்துக் கொள்வேன். தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தவுடன் அந்த மனுக்கள் மீது நடவடிக்கை எடுப்பதே முதல் வேலை என்றார். அதேபோல, முதல்அமைச்சர் பொறுப்பை யேற்றவுடன், இதற்காக ஷில்பா பிரபாகர் சதிஷ் என்ற ஐ.ஏ.எஸ். அதிகாரியை நியமித்து, அந்த மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்க வைத்தார்.

இந்தப் பணிகள் முடிந்த வுடன், முதல்வரின் முகவரி” என்ற தனிப் பிரிவை உருவாக்கி, பொதுமக்கள் தங்கள் குறைகளை நேரிலும், கடிதம், மின்னஞ்சல், வாட்ஸ்அப், போன் மூலமாக தெரிவிக்க ஏற்பாடு செய்தார். சில நேரம் அவரே அந்த அலுவலகத்துக்கு வந்து பொதுமக்களுடனும், அதன்மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரிகளுடனும் பேசிவருகிறார்.

மாத்திரை மருந்துகளை மருத்துவமனைக்கு சென்று வரிசையில் காத்திருந்து நோயாளிகள் வாங்கிய நிலையில், இப்போது அவர்களின் வீடு தேடிச் சென்று வழங்க வகைசெய்யும் மக்களைத் தேடி மருத்துவம்” திட்டத்தை தொடங்கிவைத்தார். மாணவர்களுக்கு பள்ளி நேரம் போக, மாலை நேரத்தில் டியூஷன் சொல்லிக்கொடுக்கும் “இல்லம் தேடி கல்வி” திட்டத்தை நிறைவேற்றினார். இது மட்டுமல்லாமல். கள ஆய்வில் முதல்அமைச்சர்” தி ட்டத்தின் கீழ், அவரே மாவட்டந்தோறும் சென்று அதிகாரிகளுடன் ஆலோசனை மட்டுமல்லாமல். பணிகளை நேரில் பார்வையிடச் சென்று மக்களையும் சந்திக்கிறார்.

இப்போது ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை மாவட்ட கலெக்டர்களிடம் மக்கள் தங்கள் குறைகளை தீர்க்க மனு அளித்து வருகிறார்கள். இனி கலெக்டரே மக்களிடம் சென்று, அவர்களோடு தங்கி, அவர்கள் குறைகளைக் கேட்கும் வகையில், “உங்களைத் தேடி. உங்கள் ஊரில்” என்ற திட்டத்தை அறிவித்துள்ளார். இதன்படி, ஒவ்வொரு மாவட்ட கலெக்டரும். மாதத்தில் ஒரு நாள், ஒரு தாலுகாவில் தங்கி கள ஆய்வில் ஈடுபட்டு, அரசு அலுவலகங்களை ஆய்வு செய்து, மக்களின் குறைகளைக் கேட்டறிந்து, அரசின் அனைத்து திட்டங்களும், சேவைகளும் தங்கு தடையின்றி மக்களை சென்றடைவதை உறுதி செய்வார்.

கலெக்டரே ஓர் ஊரில் தங்கி மக்களை சந்தித்து குறைகளைக் கேட்கும்போது, நிச்சயமாக அவருக்கு கீழ் பணியாற்றும் அதிகாரிகளும் உடன் செல்வார்கள் என்பதால், மக்களின் குறைகளுக்கு உடனடித் தீர்வு கிடைக்க இந்தத் திட்டம் வழிவகுக்கும். பொதுமக்கள். குறிப்பாக பெண்கள், வயது முதிர்ந்தோர் தங்கள் கோரிக்கைக்காக கலெக்டர் அலுவலகத்துக்கு தேடிச்செல்லும் நிலைமைக்குப் பதிலாக. கலெக்டரே அவர்களை நாடி வரும் இந்தத் திட்டம் ஒரு நல்ல திட்டம். “மக்களிடம் செல், அவர்களோடு வாழ், அவர்களிடம் இருந்து கற்றுக்கொள், அவர்களை நேசி, அவர்களுக்கு சேவை செய்” என்ற முதுமொழியை அறிஞர் அண்ணா அடிக்கடி சுட்டிக் காட்டுவது உண்டு. அதை இன்று அவரது வழித் தோன்றலாய் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நிறைவேற்றிக் காட்டிவிட்டார்.

இவ்வாறு தினத்தந்தி நாளேடு தலையங்கத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை புகழ்ந்துள்ளது.



சேலம் மாவட்டத்தில் தந்தை பெரியாரின் 50வது நினைவு தினத்தையொட்டி சேலம் தி.மு.க. இளைஞரணி மாநாட்டு திடலில் தந்தை பெரியாரின் திருவுருவப் படத்திற்கு மாவட்டக் கழகச் செயலாளர்கள் எஸ்.ஆர்.சிவலிங்கம் (சேலம் கிழக்கு) இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. (சேலம் மத்திய மாவட்டம்) ஆகியோர் மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தினார்கள். உடன் துணைச் செயலாளர் கே.சுரேஷ்குமார், நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், சி.தமிழ்ச்செல்வன் உட்பட கழக நிர்வாகிகள் இருந்தனர்.



விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் ஏற்பட்டுள்ள வெள்ள சேதாரங்கள் குறித்து உயர்கல்வித்துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ராஜகண்ணப்பன் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி. மார்க்கண்டேயன் முன்னிலையில் வருவாய்த்துறை,நெடுஞ்சாலைத்துறை, வேளாண்மைத் துறை, மின்சாரத்துறை,தோட்டக்கலைத்துறை ஊராட்சி உள்ளிட்ட அனைத்து துறைகளுக்கான ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.இந்த ஆலோசனை கூட்டத்தில் மழையால் ஏற்பட்டுள்ள சேதாரங்கள் குறித்து ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.மேலும் இந்த கூட்டத்தில் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் முருகேசன் மற்றும் வட்டாட்சியர்கள் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உட்பட அனைத்து துறை அதிகாரிகள் ஒன்றிய பெருந்தலைவர்கள் பேரூராட்சி மன்ற தலைவர்கள் தி.மு.க. ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

### சிவகங்கையில்

# நறுமணப் பொருட்கள் வாங்குபவர் தொடர்பான கலந்தாய்வுக் கூட்டம்!

## அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தலைமை: ப.சிதம்பரம் எம்.பி.பங்கேற்பு!

சிவகங்கை, டிச. 26 -

சிவகங்கை மாவட்டம் சிவகங்கை தாலுகா முத்துப்பட்டியில் ஸ்பைசஸ் போர்டு கடந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி சார்பில் துவக்கப்பட்டது. இந்த நிறுவனத்தின் சார்பில் நறுமணப் பொருட்கள் வாங்குபவர் தொடர்பான கலந்தாய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரிய கருப்பன் முன்னாள் ஒன்றிய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் எம்.பி. ஆகியோர் நறுமண பொருட்கள் விற்பனை குறித்து சிறப்புரையாற்றினர்.

இந்த நிகழ்ச்சியில் எம்.எல்.ஏக்கள் எஸ். மாங்குடி, பி .ஆர்.செந்தில்நாதன் ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

முன்னதாக ஸ்பைசஸ் போர்டு நிர்வாக இயக்குனர் ராமா வரவேற்றுப் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் சிவகங்கை ஒன்றியக் குழு தலைவர் திருமதி மஞ்சுளாபாலசந்தர், நகர்மன்றத லைவர் சி.எம்.துரை ஆனந்த், துணைதலைவர் எம். கார் கண்ணன், ஒன்றியசெயலாளர்கள் எம். ஜெயராமன், திருமலை முத்துராமலிங்கம், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், துணை அமைப்பாளர் மார்க்ரெட் கமலா, ஒன்றியதுணைசெயலாளர் முத்துக்குமார் வர்த்தகப்பிரமுகர்கள் தொழில்அதிபர்கள் உட்பட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

### கொரோனா - இஸ்ரேல் போர் நடப்பதால் செல்ல முடியாத நிலை! கிறிஸ்தவர்கள்

# ஜெருசலேம் செல்ல அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்பது வேடிக்கையானது!

## எடப்பாடி பழனிசாமிக்கு அமைச்சர் செஞ்சி மஸ்தான் பதில்!

செஞ்சி, டிச. 26 -

எதிர்க்கட்சித் தலைவராக இருப்பவர் மக்களை சிரமப்படுத்துவதற்காக இந்த காலகட்டத்தில் போர் நடக்கின்ற நேரத்தில் ஜெருசலம் செல்ல திராவிட முன்னேற்ற கழக அரசு எந்தவிதமான நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்லுவது வேடிக்கையான விஷயம் என அமைச்சர் செஞ்சி மஸ்தான் பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.



கிறிஸ்துமஸ் தினத்தை முன்னிட்டு கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களை தெரிவித்து பின்னர் அமைச்சர் செஞ்சி மஸ்தான் செய்தியாளர்களை சந்தித்தார்.அப்போது செய்தியாளர்களிடம் கூறுகையில் தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் சிறுபான்மை நலத்துக்காக ஒரு துறையை உருவாக்கி சிறுபான்மை மக்களுடைய நலன் காப்பதற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து இன்றைக்கு அது செயல்படுத்தி கொண்டு வருகிறது.

அதில் கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் பள்ளிவாசல்கள் பராமரிப்பு செய்வதற்கு தலா 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

400 ஆண்டு காலம் பாரம்பரியமாக உள்ள தர்காக்கள் தேவாலயங்களுக்கு சிறப்பு நிதியாக பத்து கோடி ரூபாய் வழங்கி அதிலும் தலா 2 கோடி ரூபாய் ஒரு ஒரு தேவாலயங்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

சமீபத்தில் உள்ள சென்னையில் அரசு சார்ந்த நிகழ்வில் சென்னை தாமஸ் மவுண்ட் அந்த தேவாலயத்திற்காக ரூபாய் 1 கோடியே 18 லட்சம் ரூபாயிலும், திருநெல்வேலி தேவாலயத்திற்காக ரூபாய் 1 கோடியே 3 லட்சம் லட்ச ரூபாயும், சென்ட் சேவியர் நாகர்கோவில் தேவாலயத்திற்காக சென்ட் தாமஸ் மவுண்ட் நேஷனல் தேவாலயத்திற்கு 1 கோடியே 49 லட்சம் இதேபோல தொடர்ந்து அந்த தேவாலயங்கள் பராமரிப்பதற்காக ரூபாய் 10 கோடி ரூபாயில் தொடர்ந்து வழங்கி கொண்டு வருகிறோம்.

அதேபோல புனித பயணமாக கிறிஸ்தவர்கள் ஜெருசலேம் செல்வதற்காக ஒரு ஆண்டுக்கு 600 நபர்கள் செல்வதற்காக நிதி ஒதுக்கீடு செய்து 2 கோடியே 35 லட்சத்து 85 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கொரோனா காலத்தில் அது அவர்கள் பயணம் செல்ல முடியவில்லை, இப்போது இஸ்ரேல் போர் நடந்த நிலையில் அவர்கள் செல்ல முடியாத நிலை இருந்தது.

எனவே ஜெருசேலம் செல்லுகின்ற அவர்களுக்கு உதவியாக அரசு சார்பாக ஆண்களுக்கு ஒரு நபருக்கு 37 ரூபாய் விதமும் அதே போன்று பெண்களுக்கு 10 சதவீதம் 600 பேரில் 600 கன்னியாஸ்திரிகளுக்கு தல 1 நபருக்கு 60 ஆயிரம் ரூபாயும் திட்டம் திட்டி அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே கிறிஸ்துவ மக்கள் புனித ஜெருசலேம் பயணத்தை மேற்கொள்ளும் நேரத்தில் அரசு கவனத்திற்கு எடுத்துச் சென்று பதிவு செய்து அந்த யாத்திரை முடித்து வந்த பிறகு மீண்டும் அந்த விபரத்தை கொடுக்கின்ற நேரத்தில் அவருக்கு அந்த நிதியை ஒதுக்குவதற்கான நம்முடைய துறை சார்பாக தயார் நிலையில் உள்ளது என்பது இந்த கிறிஸ்மஸ் வாழ்த்து செய்தியில் இதை இணைத்து சொல்ல கடமைப்பட்டிருக்கிறன்.

எதிர்க்கட்சித் தலைவராக இருப்பவர் மக்களை சிரமப்படுத்துவதற்காக இந்த காலகட்டத்தில் போர் நடக்கின்ற நேரத்தில் அங்கு ஜெருசலம் செல்ல திராவிட முன்னேற்ற கழக அரசு எந்தவிதமான நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்லுவது அது வேடிக்கையான விஷயம்... திடீரென்று இந்த பாசம் எப்படி வந்தது என்று உங்களுக்கே தெரியும். அவர் பா.ஜ.க.வில் இருந்து தன்னுடைய கட்சி கூட்டணி விலகி விட்டதாக சொல்கின்ற ஒரு செய்திக்கு ஒரு செய்தி சிறுபான்மை மக்களை ஏமாற்றுவதற்காக இந்த செய்தியை பரப்பி வருகிறார் என்பது அனைத்து மக்களுக்கும் தெரியும்.

எனவே ஜெருசலம் செல்கின்ற அந்த யாத்திரைகளுக்கு தமிழக அரசு சார்பாக நிதியினை ஒதுக்கீடு செய்து விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. அவர்கள் செல்லுகின்ற அரசாங்கத்திற்கு பதிவு செய்து செ ன்று திரும்பி வந்தவுடன் அந்த யாத்திரை முடிந்து விட்டது பயணம் செய்து வந்திருக்கிறோம் என முழு தகவல் கொடுத்தவுடன் அந்த உரிமை தொகையை விடுவிக்கப்படும் என்பதுதான் தமிழகத்தின் சார்பாக உள்ள அதிகாரப்பூர்வ செய்தி, எனவே இதை அவர் தெரிந்தும் அறிந்தும் இதை மூடி மறைத்து ஒரு செய்தியாக்க வேண்டும் சிறுபான்மை மக்களுடைய வாக்குகளை பெறுவதற்காக திசை மாற்றி ஒரு செய்தியை சொல்லுகிறார். என்றைக்கும் சிறுபான்மை மக்கள் ஏமாற மாட்டார்கள் என்பது அவருக்கே தெரியும் அவருடைய பேச்சு ஒரு நாடகம் என்பது அனைவரும் சொல்லுகின்றனர் என அமைச்சர் செஞ்சி மஸ்தான் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.



தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள ஆழிகுடி ஊராட்சியில் நேற்று முன்தினம் (24.12.2023) மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதியை தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி பார்வையிட்டார். அதனைத் தொடர்ந்து, அரிசி, பருப்பு உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை வழங்கினார். மக்களைச் சந்தித்து அடிப்படைத் தேவைகளைக் கேட்டறிந்து, அவர்களின் கோரிக்கைகளை அனைத்தும் நிவர்த்தி செய்வதாக உறுதியளித்தார். தூத்துக்குடி தெற்கு மாவட்ட திமுக செயலாளரும், மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சருமான அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, 24.12.2023 அன்று, முகாம் அலுவலகத்தில், நாடாளுமன்ற உறுப்பினரும், மூத்த வழக்கறிஞருமான பி.வில்சன், அவரது மகன் சென்னை உயர்நீதிமன்ற கூடுதல் அரசு வழக்கறிஞருமான ரிச்சர்ட்சன் வில்சன் ஆகியோர், கிறிஸ்துமஸ் தினத்தையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று (25.12.2023), முகாம் அலுவலகத்தில், சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, கிறிஸ்துமஸ் தினத்தையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று (25.12.2023), முகாம் அலுவலகத்தில், கழக துணை அமைப்புச் செயலாளர் எஸ்.ஆஸ்டின், கிறிஸ்துமஸ் தினத்தையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.


முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று (25.12.2023), முகாம் அலுவலகத்தில், கழக செய்தித் தொடர்பு செயலாளர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், கிறிஸ்துமஸ் தினத்தையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று (25.12.2023), முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, கிறிஸ்துமஸ் தினத்தையொட்டி குடும்பத்தினருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று (25.12.2023), முகாம் அலுவலகத்தில், சிவகங்கை மாவட்ட துணைச் செயலாளர் திருமதி ஜோன்ஸ் ரூசோ அவரது மகனுடன், கிறிஸ்துமஸ் தினத்தையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று (25.12.2023), முகாம் அலுவலகத்தில், முன்னாள் ஆயிரம் விளக்கு பகுதிச் செயலாளர் ஆகஸ்டின் பாபு, கிறிஸ்துமஸ் தினத்தையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று (25.12.2023), முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் உறுப்பினர் அருட்தந்தை ராஜ், கிறிஸ்துமஸ் தினத்தையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று (25.12.2023), முகாம் அலுவலகத்தில், பாரத் ஸ்கேன்ஸ் மேலாண்மை இயக்குநர் இமானுவேல், கிறிஸ்துமஸ் தினத்தையொட்டி குடும்பத்தினருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.




# பண்பாட்டுப் புரட்சியில், கழகமும் கலைஞரும்!



■ நீரை.மகேந்திரன்

சமுதாய மாற்றம் என்பது ஒரு நீண்ட பயணம். ஒரு தடவை நிகழ்த்தப்படும் சமூகப் புரட்சியுடன் அந்த இலக்கை அடைந்துவிட முடியாது. ஒரு புரட்சியுடன் சமூகத்தில் நிலவும் எல்லா முரண்பாடுகளையும் களைந்துவிட முடியாது. படிப்படியாகக் கட்டவிழ்ந்து செல்லும் தொடர்ச்சியான பணிகள் மூலமே சமத்துவ சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியும். இது தொடர்பான உலக அனுபவங்கள், படிப்பினைகள் ஏராளம்.

இந்தியச் சமூகச் சூழலுக்கு ஏற்ப, திராவிட இயக்கம் முன்வைத்த பிரதிநிதித்துவக் கோட்பாடுகள், சமுதாய மாற்றத்தின் தொடக்கப் பயணங்கள் எனலாம். அதை அடிப்படையாகக் கொண்டு தமிழ்நாட்டின் பண்பாட்டு பரப்பில், பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. அந்தப் பண்பாட்டு புரட்சியில் தி.மு.கழகத்தின் பங்கு கணிசமானது.

ஆட்சி அதிகாரத்துக்கு முன்பும், பின்பும் மற்றும் அதிகாரத்தில் இருந்தாலும் அதிகாரத்துக்கு வெளியே இருந்தாலும் பண்பாட்டு வெளியில் பெரும் பாய்ச்சலை நிகழ்த்திய இயக்கமாக தி.மு.க. இருந்து வருகிறது. தொடக்கக் கால படிப்பகங்களில் இருந்து, இலவச வண்ணத் தொலைக்காட்சி, சமகாலத்தில் மாவட்டம் தோறும் புத்தகக் கண்காட்சிகள் வரை பண்பாட்டு மாற்றத்துக்கு தமிழ்நாட்டை வழி நடத்தியது திமுகழகம்தான் என்பதற்கு தரவுகள் சான்றளிக்கின்றன.

### உலகளாவிய பார்வை

உலகளாவிய பார்வையுடன் இந்தியச் சூழலுக்கு ஏற்ப ஓர் அரசியல் கட்சி செயல்பட வேண்டிய விதத்தில் பேரறிஞர் அண்ணா பல பரிசோதனைகளை நிகழ்த்தினார். மக்களை விழிப்புறச் செய்வது, அரசியல் மயப்படுத்துவது, மனித உறவுகளை மேம்படுத்துவது, ஜனநாயகத்தை முழுமையான வகையில் கடைபிடிப்பது என்பதை தி.மு.கழகத்தின் வழிமுறைகளாகவே அவர் முன்னெடுத்தார். அவரைப் பொறுத்தவரை, தமிழ்நாட்டின் பண்பாட்டுப் புரட்சியானது சமூகநீதி - சமத்துவ சமூகக் கட்டமைப்பை உள்வாங்கிய மாநிலமாகத் திகழ வேண்டும் என்பதற்கான நகர்வு.

தி.மு.கழகம் மக்களை அரசியல் மயப்படுத்துவதற்கும், விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கும் தளமாக பயன்படுத்தியவை படிப்பகங்கள்.

**கலைஞரின் லட்சியங்கள் உன்னதமானவை. அந்த லட்சியங்களை அடைவதற்கு அவர் கையாண்ட வழிமுறைகள், ஜனநாயகத் தன்மை கொண்டவை.**

மிகப்பெரிய வாசிப்பு இயக்கம் அதன் ஊடாக முன்னெடுக்கப் பட்டது. சமீபத்தில், நமது முதலமைச்சர் ஒரு நிகழ்ச்சியில் குறிப்பிட்டதைப் போல, அந்தக் காலக் கட்டங்களில் தெரு முனைகள், தேநீர்க் கடைகள், முடி திருத்தகங்கள் கழகத்தின் கொள்கை பேசும் கல்லூரிகளாக விளங்கின. பட்டித் தொட்டி எங்கும் நிகழ்த்தப்பட்ட அந்த வாசிப்புப் பேரியக்கம்தான் அரசியல் பண்பாட்டு மாற்றங்களை தமிழ்நாட்டில் நிகழ்த்தியதில் பெரும் பங்கு வகிக்கிறது. தி.மு.கழகம் நிகழ்த்த விரும்பிய அரசியல் விழிப்புணர்வு, மனித உறவுகளை மேம்படுத்துவது ஆகியவற்றை ஒரே புள்ளியில் இணைத்தன கழகத்தின் படிப்பகங்கள். 1957ஆம் ஆண்டு தி.மு. கழகம் முதன் முதலில் தேர்தலைச் சந்தித்தபோது தேர்தல் திட்டமிடும் அலுவலகமாக அந்தப் படிப்பகங்கள் இருந்தன.

கழகத்தின் தொடக்க கால பண்பாட்டுப் புரட்சிகளில் கலைத் துறையும் பெரும் பங்கு வகித்தது. பகுத்தறிவு, சுயமரியாதை, மூடநம்பிக்கை ஒழிப்பு ஆகியவற்றுடன் எதிர்காலம் குறித்த அரசியல் பாடம் எடுக்கும் வகுப்புகளாக திரைப்படங்கள் அமைந்தன. அவை தனியாகவும் விரிவாகவும் எழுதும் அளவுக்கு ஆழம் கொண்டவை. அந்தக் காலகட்டங்களில் கலைஞரின் தனித்தன்மையான எழுத்துகள், நாவன்மை, செயல்பாட்டு வேகம் எல்லாம் பண்பாட்டுப் புரட்சியின் முன்னணிப் படையை வழிநடத்தும் தன்மை கொண்டவை.

### களமும் நிலமும்...

பேரறிஞர் அண்ணா தனது காலத்தில் தமிழ்நாட்டின் பண்பாட்டுக் களத்தை தயார் செய்து வைத்தார் எனில், முத்தமிழறிஞர் கலைஞர், பெரியாரும் அண்ணாவும் கண்ட கனவை செயல்படுத்திக் காட்டியவராக இருந்தார். சமீபத்தில் வெளியான **'என்றும் தமிழர் தலைவர்'** நூலில் அது குறித்து நமது முதலமைச்சர் எழுதியுள்ள கட்டுரையில்

''தமிழர்கள் வாழும் தமிழ்நாட்டுக்கு 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டக்கூட முடியாத நிலை இருக்கிறதே'' என்று 1956 ஆம் ஆண்டு தன்னைத்தானே நொந்துகொண்டார் தந்தை பெரியார். 1968 ஆம் ஆண்டு 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டினார் பேரறிஞர் அண்ணா.

சாதியின் பெயரால் கல்வி மறுக்கப்பட்ட, வேலைவாய்ப்பு பெற முடியாத சூத்திர சாதிப் பிள்ளைகள் அனைவரும் படித்து முன்னேற வேண்டும், வேலைவாய்ப்புகளைக் கைப்பற்ற வேண்டும் என்று பெரியார் விரும்பினார். அந்த முன்னேற்றத்தைப் பார்த்தார்" எனக் குறிப்பிடுகிறார்.

### நுட்பமான மாற்றங்கள்

பெரும் மக்கள்திரளில் புரட்சிகரமான மாற்றங்களை நிகழ்த்த வேண்டும் எனில், பழைய சிந்தனை மரபுகளை அழித்துவிட்டு புதிய சிந்தனை போக்கினை உருவாக்க வேண்டியது அவசியமானது. இல்லையெனில், புரட்சிகரமான ஆட்சி மாற்றம் நிகழ்ந்தாலும், மக்கள் மனங்களில் அந்த மாற்றத்தை ஏற்றுக்கொள்ள வைக்க முடியாது என்பது அடிப்படைப் பாடமாகும். இதை அறிவார் கலைஞர்.

ஆட்சி மாற்றத்தால் சட்ட ரீதியான முன்னெடுப்புகளைச் செய்தாலும் பண்பாட்டுத்தளங்களில் நிகழ்த்த வேண்டிய மாற்றங்களிலும் அவர் அதனை தொடர்கிறார். அதற்கு பல நுட்பமான உதாரணங்களைக் காட்ட முடியும்.

சிலப்பதிகாரத்தை முன்வைத்து தமிழ்நாட்டில் புதிய பண்பாட்டு மரபினை முன்வைத்தவர் அவர்தான். ஆட்சிக்கு முன்பும் ஆட்சிக்குப் பின்னரும் அந்த மரபை அவர் உயர்த்திப் பிடிப்பவராக இருக்கிறார்.

புலவர் குழந்தை எழுதிய நூல் **'இராவண காவியம்'**. 1948 ஆம் ஆண்டில், அந்த நூல் தடை செய்யப்பட்டது. 1971 ஆம் ஆண்டில் அந்த நூலுக்கான தடையை நீக்குகிறார் கலைஞர். அதற்கு அவர் ஒரு விளக்கம் அளிக்கிறார். வடக்கில் தொடங்கி தெற்கு நோக்கிப் பயணிக்கும் ஒரு மன்னன் மகனின் கதையை ராமாயணம் எடுத்துக் காட்டுகிறது என்றால், தெற்கில் தொடங்கி வடக்கே பயணிக்கும் காவியம் 'ராவண காவியம்' என்று கூறி அந்த புத்தகத்தின் மீதான தடையை நீக்குகிறார்.

திருவள்ளுவர் மரபினை அவர் உயர்த்திப் பிடித்ததும், வள்ளுவம் தொடர்பான அடையாளங்களை உருவாக்கியதும், அவரது தமிழ்ப் பற்று மட்டும் காரணமாக இருக்கவில்லை. வள்ளுவத்தை உலகப் பொதுமறையாக அவர் முன் வைத்ததையும், ஒரு மாற்றுப் பண்பாட்டின் தொடர்ச்சி என்பதாகவே பார்க்கலாம். மனுநீதியின்பால் சொல்லப்பட்ட கருத்துக்களை உடைக்க, வாழ்நாள் முழுவதும் வள்ளுவம் பேசுபவராக இருந்தார். இப்படித் தொடர்ச்சியாக பண்பாட்டுத்தளத்தில் அவர் முன்வைத்த மாற்று மரபுகள் வியப்பளிப்பவையாக இருக்கின்றன.

கலைஞரின் லட்சியங்கள் உன்னதமானவை. அந்த லட்சியங்களை அடைவதற்கு அவர் கையாண்ட வழிமுறைகள், ஜனநாயகத் தன்மை கொண்டவை. முழுமுற்றாக தனது ஆற்றல் என்ன என்பதை அறிந்து அந்த லட்சியங்களை சாத்தியமாக்குவதற்கான வழிகளை கையாண்டார். நடைமுறை சாத்தியமாக கூடிய எல்லா வழிகளையும் வழிகளிலும் அவர் தொடர்ந்து இயங்கினார்.

-தொடரும்

## திராவிட இயக்க இதழ்கள் - 'தமிழ்நிலம்'



'பாவலரேறு' என்று தமிழறிஞர் தேவநேயப் பாவாணரால் அழைக்கப்பட்ட, 'பாவலரேறு' பெருஞ்சித்திரனார் அவர்கள் நடத்திய இதழ் 'தமிழ்நிலம்'. இது 1982 நவம்பர் 7 அன்று தொடங்கப்பட்டது.

1981 ஆம் ஆண்டு 'உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்' என்ற அமைப்பை பெருஞ்சித்திரனார் தோற்றுவித்தார். அந்த அமைப்பின் இதழாகவே 'தமிழ்நிலம்' வெளியிடப்பட்டது. இது வார இதழாக வெளிவந்தது.

ஏற்கெனவே தமிழ் மொழி வளர்ச்சிக்கு என 'தென்மொழி', மாணவர்களுக்காக 'தமிழ்ச்சிட்டு' என இரண்டு இதழ்களை நடத்தி வந்த பெருஞ்சித்திரனார், இந்த இதழ்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டு, தான் கொண்ட அரசியல் நிலைகளுக்காகவே இதழொன்றைத் தொடங்க வேண்டுமென்று எண்ணினார். அதன்படி 'அரசியல்' என்னும் தலைப்பில் இதழ் கொணர எண்ணி அதற்கான அறிவிப்பையும் வெளியிட்டார். 'அரசியல்' என்னும் தலைப்பில் கொணர முடியாமல் 'தமிழ் நிலம்' என்னும் பெயரைத் தாங்கி இந்த இதழ் வெளிவந்தது.

'தமிழ் நிலம் உங்கள் இதழ்!
உங்கள் சொத்து!
உங்களுக்கு உரிமை பெற்றுத்
தரும் படைக்கலம்!
ஒவ்வோரிதழும் தமிழ்நில
உரிமைக்கு ஒருபிடி
எருவாக உதவுதல் வேண்டும்'

என்று 'தமிழ்நிலம்' உருவான காரணத்தை, 'பா' வடிவில் வெளியிட்டார். மேலும் உலகமெல்லாம் பரவியிருந்த தமிழர்களில் இருந்து இந்த இதழுக்காக பொறுப்பாசிரியர், கட்டுரையாசிரியர், செய்தியாசிரியர், விளம்பரக் குழுவினர், ஓவிய ஆசிரியர் ஆகியோரையும் தேர்வு செய்து, அந்தப் பட்டியலை இதழில் பாவலரேறு வெளியிட்டார்.

தொடக்கத்தில், எட்டு இதழ்களே வெளிவந்தன. பின்னர் மாதத்துக்கு இரண்டு இதழாகவும், பின்னர் மாத இதழாகவும் வெளியானது. பெருஞ்சித்திரனார் மறைவுக்குப் பிறகு சில இதழ்களோடு நின்றுபோனது. சில ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் அதே பெயரில், அவரது குடும்பத்தினர் சில காலத்துக்குக் கொண்டு வந்தனர்.

## ::ப்ளாஷ்பேக்



### வரவேற்பும் வழக்கு நிதியும்!

1976 ஆம் ஆண்டில், அவசர நிலைக் காலத்தில், கழக அரசு கலைக்கப்பட்டு எண்ணற்றோர் சிறையில் வாடிய நேரத்தில், சில மாதங்கள் கழித்து, அவ்வப்பொழுது சிலர் விடுதலையாகினர். விருதுநகரில் அவ்வாறு வெளிவந்த மிசா தியாகிகளுக்கு வரவேற்பும், தி.மு.க வழக்கு நிதி வழங்குதலும், அப்போதைய கவிதா கலைமன்றக் கொட்டகை அரங்கில் நடைபெற்றது. 23 வயது இளைஞனாக நான், அந்த நிகழ்வுக்கு வருகை தந்திருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடம் ஆறுதல் தெரிவித்து வழக்குநிதி வழங்கினேன். உடன் நகர தி.மு.க பொறுப்பாளர் வ.பெ.வடிவேல், கருப்பசாமி ஆகியோர் உள்ளனர்.



கவின் க.முருகேசன்

**-கவின் க.முருகேசன், நகர மன்ற முன்னாள் உறுப்பினர், விருதுநகர்**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி :அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### பிற்படுத்தப்பட்டோர் அமைச்சரகம்

**1971 ஆம் ஆண்டு கலைஞர் ஆட்சியில், தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர் நலனுக்கெனத் தனி அமைச்சகம் உருவாக்கப் பட்டது. தனி அமைச்சர், துறைக்கான மானியக் கோரிக்கை என அறிமுகப்படுத்தப்பட்டன. ஆனால், அவை முழுமையாகச் செயல்படாமல் முடங்கி இருந்த நிலையில், 1989-இல் கலைஞர் மீண்டும் ஆட்சிக்கு வந்ததும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை வளர்ச்சி வேகம் எடுத்தது. தனித் திட்டங்கள், செயல்முறைகளை வகுத்திட தலைமைச் செயலகத்தில் தனி நிர்வாகம் உருவாக்கப்பட்டது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 340




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131